விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 179 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 242 சனிக்கிழமை (15.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## இலங்கை வருகிறார் ஜெய்சங்கர் மோடியின் வருகையும் உறுதியாகும்

(கொழும்பு)

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ் .ஜெய்சங்கர் இந்த மாதம் இலங்கை வரவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரின் இந்த விஜயத்தின் போது இரு நாடுகளினதும் உறவை வலுப்படுத்துவ தற்கான பல வேறு உயர்மட்ட 15



## ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கத் தயார்
### அனந்தி சசிதரன்



(யாழ்ப்பாணம்)

ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில்தமிழ்ப் பொதுவேட் 15

## நாட்டு துப்பாக்கியுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி கட்சன் வீதியில் நாட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கைது நடவடிக்கை நேற்று இடம்பெற்றுள்ளது. 15

## சதொசவில் பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் சதொச நிறுவனம் சில அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைக்கத் தீர்மானித்துள்ளது.

அதன்படி, 01 கிலோ கடலையின் 15

# புலம்பெயர் தமிழர்களிடம் சஜித் அடிபணிந்துவிட்டார்

## 13ஐ அமுல்படுத்துவது தொடர்பில் மொட்டுக்கட்சியினர் விமர்சனம்



(கொழும்பு)

**புலம்பெயர் தமிழ் அமைப்புகளிடம் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் அடிபணிந்து விட்டார் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.**

13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதாக சஜித் பிரேமதாஸ தெரிவித்தது தொடர்பில் கருத்து வெளியிடும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 02

## யாழை ஸ்மார்ட் நகரமாக்குவது
### உலக சுகாதார ஸ்தாபன அதிகாரிகள் ஆளுநருடன் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தை ஸ்மார்ட் நகரமாக்குவது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸுடன், உலக சுகாதார ஸ்தாபன அதிகாரிகள் நேற்று கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

வடக்கு மாகாண ஆளுநர் 15

## ஊடகவியலாளர் பிரதீபன் வீடு தாக்கப்பட்ட சம்பவம்
### விசாரணைக்காக நான்கு பொலிஸ் குழு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - அச்சுவேலியில் ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டின் மீது அடையாளம் தெரியாத நபர்கள் புகுந்து உடைமைகளுக்கு தீ வைத்து வன்முறை 15

## 13ஐ அமுல்படுத்தினால் இரத்த ஆறு ஓடும்
### முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா



(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த முயற்சித்தால், இரத்தம் சிந்தி 15

## பயங்கரவாதத் தடைச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றது
### இலங்கை அரசை விமர்சித்த அமெரிக்கத் தூதுவர்

(நியூயோர்க்)

இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றது என கடும் விமர்சனத்தை முன்வைத்தார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்.

நியூயோர்க்கின் காசில்டன் கோர்னர்ஸில் உள்ள ஸ்டேட்டன் தீவு இந்துக் கோயிலுக்குச் 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு

# பொருளாதாரம் என்றால் என்ன என பாடம் கற்பிக்க வேண்டும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

21 ஆம் நூற்றாண்டின் பொருளாதாரம் என்ன என்பதை புரிய வைக்க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாடம் கற்பிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை இளைஞர் சமூகத்துக்காக பொதுக் கற்றலுக்கான கல்வித் தளமான www.publiclearn.lk/ என்ற இணையத்தளத்தை உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்து வைத்ததன் பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர், இன்று நாம் அறிவு நிறைந்த சமூகத்தில் வாழ்கிறோம்.

அந்தச் சமூகத்தில் போட்டித் தன்மையுடன் முன்னேறுவது அவசியம்.

கல்வியில் நாம் முன்னணி நாடாக இருப்பதனால், இது கடினமான காரியம் அல்ல என்று நான் நம்புகிறேன்.

தற்போது கல்வித்துறையில் உள்ள குறைபாடுகளை சீர் செய்யும் பணியில் ஈடுபட்டு வருகிறோம்.

இந்தப் புதிய திட்டம் அதற்கு நல்ல பங்களிப்பை வழங்கும்.

எவ்வாறாயினும், ஒரு புதிய பொருளாதார மாற்றத்திற்கான நமது அணுகுமுறையில் மாற்றம் தேவை.

நிச்சயமாக நம்மால் அதனை சாதிக்க முடியும். எதிர்காலத்தில் வகுப்பறைகள் மற்றும் சுவர்கள் இன்றி பாடசாலைக்கு வெளியிலான கற்றல் வாய்ப்புகள் குறித்து கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

அவ்வாறான திட்டமே இன்று தொடங்கிறது. 21 ஆம் நூற்றாண்டின் பொருளாதாரம் என்ன என்பதை பாராளுமன்றத்தில் உள்ள சிலர் புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கின்றேன்.

இதனைப் புரிய வைப்பதற்கு அவர்களுக்கும் சில வகுப்புகளை நடத்தவேண்டும். என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ம-7,10)

## பயங்கரவாதத்...

சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட வேளை தீவில் உள்ள தமிழ் அமெரிக்க சமூகத்தைச் சந்தித்து கலந்துரையாடலை மேற்கொண்ட போதே தமது விமர்சனத்தை வெளியிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பில் இலங்கையில் ஜனநாயகம், பொறுப்புக்கூறல் மற்றும் அரசியல் சீர்திருத்தத்தை மேம்படுத்துவதற்கான தனது முயற்சிகளை மையமாகக் கொண்டு ஜூலி சங் உரை நிகழ்த்தினார்.

அத்துடன் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கிற்கு தாம் மேற்கொண்ட பல விஜயங்களை அவர் எடுத்துரைத்தார்.

குறிப்பாக மே 18 அன்று யாழ்ப்பாணத்திற்கு மேற்கொண்ட தமது அண்மைய விஜயத்தையும் அவர் நினைவூட்டினார்.

தமது விஜயங்களின் போது, முன்னாள் போர் வலயங்களில் குறிப்பிடத்தக்க இராணுவ பிரசன்னம், பயங்கரவாதத் தடைச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டமை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மார்களின் தொடர்ச்சியான போராட்டங்கள் ஆகியவற்றை தாம் அவதானித்ததாக குறிப்பிட்ட சங் காணாமல் போனோர் அலுவலகத்தின் திறமையின்மையையும் அவர் விமர்சித்தார்.

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் அமெரிக்க மையத்தை நிறுவுதல், மத்திய கிழக்கில் ஒரு புதிய மையத்திற்கான திட்டங்கள் உட்பட பல்வேறு முயற்சிகள் குறித்தும் சங் அங்கு விவாதித்தார்.

விரைவில் யாழ்ப்பாணத்தில் ஆங்கிலம் கற்பிக்க தன்னார்வலர்களை அமெரிக்கா அனுப்பும் என்றும் ஜூலி சங் தெரிவித்தார்.

மேலும், வலுவான ஜனநாயகத்தை பேணுதல், கடல் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் புவிசார் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல் என்ற மூன்று முக்கிய மூலோபாய நலன்களையே அமெரிக்கா இலங்கையில் விரும்புகிறது என்றும் அமெரிக்கத் தூதுவர் ஜூலிசங் குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

# இலங்கையின் தேர்தல்

## விவகாரங்களில் தலையிடவில்லை

## சர்வதேச நாணயநிதியம்

இலங்கையின் தேர்தல் விவகாரங்களில் சர்தேச நாணய நிதியம் தலையிடவில்லை என சர்தேச நாணயநிதியத்தின் இலங்கைக்கான தூதுக் குழுவின் பிரதானி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விடுவிக்கப்பட்டுள்ள மூன்றாம் தவணை தொடர்பில் நேற்று வெள்ளிக்கிழமை (14) காலை இடம்பெற்ற நிகழ்நிலை முறைமை ஊடான ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல் தொடர்பில் இலங்கை மக்களே தீர்மானிக்க வேண்டும். தேர்தல் இடம்பெறுமாயின் உரிய காலவரையை தயாரித்துக் கொள்ள வேண்டும்.

தேர்தலை நடத்துவது எமக்குப் பிரச்சினையில்லை. இருப்பினும் தற்போதைய செயற்திட்டத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்

ஏனெனில் பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை இன்னும் மீளவில்லை என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் பிரதானி பீட்டர் ப்ரூவர் தெரிவித்தார். (ம-7,10)

## புலம்பெயர்...

"விடுதலைப்புலிகள் அமைப்பால் பொலிஸார் கொலை செய்யப்பட்ட கொடூரமான நாள் நேற்றாகும் (நேற்று முன்தினம்) அப்போது ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாச வால் எடுக்கப்பட்ட சில தவறான முடிவுகளாலேயே இந்த அநியாயம் ஏற்பட்டது.

அன்றன் பாலசிங்கம் உள்ளிட்ட விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்களை அன்று கொழும்புக்கு அழைத்து வந்து, பேச்சு நடத்தி ஆயுதங்கள் மற்றும் நிதி என்பன விடுதலைப் புலிகள் அமைப்புக்கு வழங்கப்பட்டன.

இராணுவத்தினர் முகாம்களுக்கு அனுப்பட்டனர். அப்போதுதான் நிராயுதபாணியாக இருந்த பொலிஸார் கொல்லப்பட்டனர்.

சஜித் பிரேமதாச யாழ்ப்பாணத்துக்குச் சென்று, 13 பிளஸ் நடைமுறைப்படுத்தப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். 13 பிளஸ் என்றால் என்ன என்பது குறித்து அவருக்குத் தெளிவு உள்ளதா எனத் தெரியவில்லை.

ஜே.ஆர். ஜயவர்தன 13ஐ கொண்டு வந்திருந்தாலும் இதை முழுமையாக அமுலாக்கவில்லை. அரச பிரதிநிதியாக ஆளுநர் செயற்பட்டார். அதன்பின்னர் பிரேமதாச, சந்திரிகா, டி.பி. விஜேதுங்க, மகிந்த ராஜபக்ச ஆகியோர் ஜனாதிபதிப் பதவிக்கு வந்திருந்தாலும் 13ஐ முழுமையாக நடைமுறைப் படுத்துவதில் உள்ள பாரதூரத் தன்மையால் அதனைச் செயற்படுத்தவில்லை.

ஆனால், சஜித் பிரேமதாச தற்போது 13 பிளஸ் எனக் கூறுகின்றார். மாகாணங்களில் பொலிஸ் கட்டமைப்பு உருவாகினால் என்ன நடக்கும்? சஜித் ஜனாதிபதியாகி அவர் கூறியதைச் செய்தால், அன்று ரணசிங்க பிரேமதாச படையினரை நிராயுதபாணியாக்கிய முடிவை விடவும் பயங்கரமானதாக அமையும்.

தேர்தலுக்கு முன்னரே இதைக் கூறியது நல்லம். அப்போது மக்களுக்கு முடிவொன்றை எடுக்க முடியும்.

பிரேமதாச நாட்டுக்கு பல நல்ல விடயங்களை செய்தார். ஆனால், அமைதிப் பேச்சுக்குச் சென்று முழு நாட்டையும் நாசமாக்கினார். இறுதியில் குண்டுத் தாக்குதலில் அவரும் கொல்லப்பட்டார்.

மகிந்த ராஜபக்சவின் புண்ணியத்தால் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. ஆனால், புலம் பெயர் தமிழர் அமைப்புக்கள் இன்னும் உள்ளன. தமது இலக்கை அடைவதற்கு உலகில் பல நாடுகளில் அவை செயற்படுகின்றன.

தேர்தல் நெருங்கும்வேளை அந்த அமைப்புக்களுக்குச் சஜித் அடிபணிந்து விட்டார்போலும். எனவே, முக்கியத்துவமிக்க நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கின்ற பிரச்சினைகளின் போது சஜித் சிந்தித்துச் செயற்பட வேண்டும் என்றார். (ம-7,10)


### விற்பனைக்கு

கோண்டாவில் டிப்போவிற்கு
அருகாமையில் 1 3/4 பரப்பு வீடும்
காணியும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
077 358 3879
(1218)

### வேலையாட்கள் தேவை

ஈர அரிசி அரைத்து,
மா வறுத்தல் ஆண், பெண்
இருபாலாரும் தேவை.
சம்பளம் - 2,500/= இற்கு மேல்
077 936 1356
(1222)

### அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 16.05.2024 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

அமரர் திருமதி
சாரதாதேவி தங்கராசா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 15.06.2024 சனிக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து சபிண்டீகரண வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.



தோற்றம் 11.10.1941 மறைவு 16.05.2024

"சாரதா இல்லம்"
அல்வாய் வடக்கு, அல்வாய்.
குடும்பத்தினர்
(C-0600)

### வேலையாட்கள் தேவை

கொடிகாமம் நகரில்
ஆரம்பிக்கவுள்ள
Multy Shop இற்கு
அனுபவமுள்ள ஆண், பெண்
வேலையாட்கள் தேவை.
077 811 8948
(1220)

### வாகன சாரதி தேவை

350 ரக கன்டர்
வாகனம் ஓட்டுவதற்கு
AD License உள்ள
வாகன சாரதி தேவை.
(யாழ்ப்பாணம்)
076 821 9414
(1219)

### கட்டடப் பொருட்கள் விநியோகம்

1.மணல் வகை - கட்டு மணல், பூச்சு மணல் (கண்டாவளை பெருக்கன் நைஸ்)
2.சல்லி வகை - கருங்கல் சல்லி, வெள்ளை சல்லி
3.கண்டல் வகை - 9" X 6" கருங்கல் , 9" X 6" வெள்ளைக்கல் (காட்டுக்கல்)
4.டஸ்ட் - கருங்கல் டஸ்ட், வெள்ளைக் கல் டஸ்ட்
5.கலவன் டஸ்ட்
6.தளம் மற்றும் நில பதிவுக் கல்
7.கூரை ஓடு வகைகள்
கொங்கிறீற் கல், கொங்கிறீற் வேலி, தூண் ஆகியவை நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
கட்டட வேலைகளும் செய்துதரப்படும்.
தொடர்புகளுக்கு : 077 666 7684 / 076 096 4460
(641)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வேலைத்திட்டங்களை மாற்றினால் மீண்டும் நெருக்கடி

## ஐ.எம்.எப் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**புதிதாக ஆட்சியமைக்கின்ற அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டங்களை மாற்றியமைக்குமானால் அது நாட்டின் நலனிற்குப் பாதகமாகவே அமையுமென சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவர் தெரிவித்துள்ளார்.**



தேர்தல் நடைபெற்ற பின்னர் புதிதாக ஆட்சியமைக்கின்ற அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டங்களை மாற்றியமைப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுமா என ஊடகவியலாளர் கேள்வி எழுப்பியிருந்தார்.

அத்துடன் மறுசீரமைப்பு விடயங்கள் வரிகளின் குறைப்பு அதற்கான வாய்ப்புகள் காணப்படுமா என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவரிடம் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவர்,

இலங்கை இவ்வாறான நெருக்கடிக்கு முகம் கொடுப்பதற்கு பிரதான காரணமே அரசாங்கத்தின் வருமானத்தை குறைப்பதற்காக முன்னெடுத்த திட்டங்கள் ஆகும்.

எனவே நான் இரண்டு விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளேன். ஒன்று எவ்வாறு அரச வருவாயை மீளக் கட்டியெழுப்புவது.

இரண்டாவது இலங்கையை இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அனுமதிக்கும் வேலைத்திட்டங்கள் பங்கு தொடர்பாக குறிப்பிட்டுள்ளேன்.

நிச்சயமாக இங்கே நாம் செலவினங்களுக்கும் வருவாய்க்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

செலவுகளுக்கு இணையாக அரச வருமானத்தை உயர்த்த நடவடிக்கை அவசியம். இதற்கு வரிவருமானம் அவசியமானது. இவ்வாறு செய்வதன் ஊடாகவே மேலும் கடனை பெறமுடியும். இன்னும் இது தொடர்பாக விரிவாகப் பேச வேண்டும்.

இது தொடர்பாக கருத்துக்களை பெறுவதற்கு நாம் தயாராகவே உள்ளோம். பொது நிதி மேலாண்மைச் சட்ட மூலம் ஒன்று தற்போது பாராளுமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது நிதி கட்டமைப்பை வலுப்படுத்தும் சட்டமூலமாகும். அத்துடன் இந்த சட்டமூலம் நிதிப் பொறுப்பை அதிகரிக்க இலங்கைக்கு உதவும்.

இதன் மூலம் அரச செலவுகளையும் கட்டுப்படுத்த முடியும் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-6)

# வாகன இறக்குமதி கட்டுப்பாடு 2025 இல் தளர்த்த முடிவு




(கொழும்பு)


வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கான திட்டத்தை இன்றைய தினத்திற்குள் இலங்கை இறுதி செய்யவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் 3 ஆம் காலாண்டிற்குள் பொதுப் போக்குவரத்து மற்றும் விசேட நோக்கங்களுக்கான வாகனங்களின் இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த ஆண்டின் 4ஆம் காலாண்டிற்குள் சரக்கு போக்குவரத்திற்கான வாகனங்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

2025 ஆம் ஆண்டில் அனைத்துவித வாகனங்களுக்குமான இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதிய அறிக்கை தெரிவிக்கின்றது. (4-6)

# சந்தையில் முட்டை விலை மீண்டும் அதிகரித்தது



(கொழும்பு)

சந்தையில் முட்டை விலை மீண்டும் அதிகரித்துள்ளது என இலங்கை முட்டை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது

அதன்படி முட்டை ஒன்றின் விலை 55-60 ரூபாய் வரை அதிகரித்துள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர்

சிவப்பு முட்டை ஒன்றின் விலை 50 ரூபாவாகவும் வெள்ளை முட்டை ஒன்றின் விலை 49 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது

மேலும் சந்தைக்கு அதிகளவு முட்டை உற்பத்தி வருவதால் முட்டையின் விலை மேலும் குறையும் என இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் அண்மையில் தெரிவித்திருந்த போதிலும் இவ்வாறான பின்னணியில் மீண்டும் முட்டையின் விலை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் மற்றும் வியாபாரிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். (4-6)

# கடனட்டை வட்டி வீதங்களை குறைப்பது தொடர்பில் ஆராய்வு




(கொழும்பு)

கடனட்டை வட்டி வீதங்களை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப படுகின்றது.

இந்த விடயத்தை ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பணவீக்கம் 0.9 வீதமாக காணப்படுவதாக சர்வ தேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளதாக ஆசு மாரசிங்க சுட்டிக் காட்டியுள்ளார். சர்வதேச நாணய நிதியத் தின் மூன்றாம் தவணைக் கடனாக 336 மில்லியன் அமெ ரிக்க டொலர் கிடைக்கப் பெற் றுள்ளதாக கூறியுள்ளார்.

நாடு தற்பொழுது செல்லும் பாதையை மாற்றினால் பாரதூரமான பொருளாதார பாதிப்புக்கள் ஏற்படக்கூடும் எனவும் சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளதாக ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார். (4-6)

# பல்கலை கல்விசாரா ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடியாது

## கல்வி அமைச்சு




(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பளத்தை இவ்வருடம் அதிகரிக்க முடியாது என கல்வி அமைச்சு உப வேந்தர்களுக்கு அறிவித்துள்ளது.

அதன்படி சம்பள அதிகரிப்புக் கோரி ஊழியர்கள் ஆரம்பித்துள்ள தொழிற்சங்க நடவடிக்கைக்கு நேற்றுடன் 43 நாட்கள் பூர்த்தியாகியுள்ளன.

இந்நிலையில் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தால் பல பல்கலைக்கழகங்களின் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சம்பளத்தில் 15 வீத வற்வரி அறவிடப்படுகின்றமை மற்றும் மாதாந்த கொடுப்பனவு அதிகரிக்கப்படாதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பினை முன்னெடுத்துள்ளனர்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் ஆரம்பித்துள்ள இந்த தொடர் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் காரணமாக 17 அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் 17 உயர்கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர் ஜோன் ஹாபட் தடகள போட்டி
# தெல்லிப்பளை மகாஜனவுக்கு 11 பதக்கங்கள்



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான.சேர் ஜோன் ஹாபட் தடகள போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை நடைபெற்றது.

இதில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி இரு முதலிடங்கள், எட்டு இரண்டாமிடங்கள், ஒரு மூன்றாம் இடம் உட்பட 11 பதக்கங்களை கைப்பற்றி சாதனை படைத்துள்ளனர்.

இதில் 15வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் ரி.ஆரதி உயரம் பாய்தல் போட்டியில் 1 ஆம் இடத்தையும், 80 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் 2 ஆம் இடத்தையும், பி.பிரசாலினி தட்டு எறிதல் போட்டியில் 2 ஆம் இடத்தையும், 4*100 மீற்றர் அஞ்சல் ஓட்டம் மற்றும் 4*400 மீற்றர் அஞ்சல் ஓட்டம் என்பவற்றில் இரண்டாமிடத்தையும் பெற்றனர்.

13வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் கெவின்லீதன் 100 மீற்றர் ஓட்டத்தில் 3 ஆம் இடத்தையும், பிரவீன் உயரம் பாய்தல் போட்டியில் 2 ஆம் இடத்தை மற்றும் 14 வயதிற்கு உட்பட்ட பிரிவில் கிருத்திகன் நீளம் பாய்தல் போட்டியில் 1 ஆம் இடத்தையும், கபிஷன் 200 மீற்றர் ஓட்டத்தில் 2 ஆம் இடத்தையும் பெற்றனர். 15 வயதிற்கு உட்பட்ட பிரிவில் கவிஷன் 400 மீற்றர் ஓட்டம் மற்றும் 100 மீற்றர் ஓட்டம் என்பவற்றில் 2 ஆம் இடத்தையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.(4-6-90)

## உலகக் கிண்ண கிரிக்கெட்
# பங்களாதேஷ் அணி 25 ஓட்டங்களால் வெற்றி




இருபது-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று முன் தினம் இடம்பெற்ற போட்டியில் நெதர்லாந்து அணியை வீழ்த்தி பங்களாதேஷ் அணி 25 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிப் பெற்ற நெதர்லாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்திருந்தது

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இதனையடுத்து, 160 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 25 ஓட்டங்களால் தோல்வியடைந்துள்ளது. (4-6)

# ஐரோப்பிய கிண்ண கால்பந்தாட்டம் இன்று ஜேர்மனியில் ஆரம்பம்



ஐரோப்பிய கிண்ண கால்பந்து போட்டியின் 17ஆவது தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இந்தத் தொடரானது இந்த ஆண்டு ஜேர்மனியில் நடைபெறவுள்ளது.

இதில் 24 அணிகள் ஐரோப்பாவின் கிண்ணத்திற்காக போட்டியிடவுள்ளன. கடைசித் தொடரில் இங்கிலாந்தை பெனால்டியில் வீழ்த்தி சம்பியன் பட்டத்தை இத்தாலி இறுதியாக வெற்றி பெற்றது.

கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக 2020 தொடர் 2021 இற்கு ஒத்திவைக்கப்பட்ட பின்னர் 2024 ஆம் ஆண்டுக்கான 17ஆவது தொடர் வழக்கமான நான்கு ஆண்டு சுழற்சி முறைக்கு மாற்றப்பட்டுள்ளது.

குழு நிலை போட்டிகள் ஜூன் 26 ஆம் திகதி வரையும் நடைபெற்று நாக் அவுட் சுற்றுக்கள் ஜூன் 29 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதன் இறுதிப் போட்டி ஜூலை 14 ஆம் திகதி பேர்லினில் உள்ள ஒலிம்பியாஸ்டேடியனில் நடைபெறவுள்ளது. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைத்திட்டத்தின் நேரத்தை தேர்தல் பாதிக்கும்

## ஐ.எம்.எப் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் தேர்தலை நடத்துவதில் நாட்டிற்கு எந்தப் பிரச்சினையும் இல்லை ஆனால் நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் நேரத்தில் பாதிப்பு ஏற்படும் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவின் மூத்த தலைவர் பீட்டர் ப்ரூவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட கடன் வசதிக்கான இரண்டாவது மதிப்பீடு தொடர்பான எண்ணங்களை தெரிவிக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை பிரதிநிதிகள் நேற்று நடத்திய விசேட ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அத்துடன் எந்தவொரு நாட்டின் ஜனநாயகத்தை யும் சர்வதேச நாணய நிதியம் மதிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இலங்கையில் தேர்தல் நடத்தப்பட்டால் அது சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டத்தின் நேரத்தை பாதிக்கும் என வும், உரிய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து புதிய கால அட்டவணையை தயாரிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (4-6)

# விஜயதாச ராஜபக்சவின் தடையுத்தரவு நீடிப்பு



(கொழும்பு)

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்படுவதைத் தடுக்கும் வகையில் அவருக்கு விதிக்கப்பட்ட தடையுத்தரவினை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நீடிக்குமாறு கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி சாமரி வீரசூரிய உத்தரவிட்டுள்ளார்.

நேற்று சரத் ஏக்கநாயக்க, கீர்த்தி உடவத்த மற்றும் விஜயதாச ராஜபக்ஷ ஆகியோரை பிரதிவாதிகளாக துமிந்த திஸாநாயக்க அழைத்த போது, இந்த தடை உத்தரவு நீடிக்கப்பட்டது.

அத்துடன் தடை உத்தரவுக்கு எதிரான தரப்பினரின் ஆட்சேபனைகள் மற்றும் பதில்களை ஜூலை 18 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் நீதிபதி குறிப்பிட்டுள்ளார். (4-6)

# அதிகரிக்கும் டெங்கு

## யாழ்ப்பாணம் உட்பட 7 மாவட்டங்கள் அபாயத்தில்

(கொழும்பு)

நாட்டில் உள்ள 7 மாவட்டங்களில் டெங்கு பரவல் அதிகரித்துள்ளதாக சுகாதாரத்திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அதன்படி, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, யாழ்ப்பாணம், காலி, கண்டி மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களே அபாய பகுதிகளாக அடையாளம்காணப்பட்டுள்ளன.

அத்துடன், இந்த வருடத்தில் இதுவரை நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 26,084 ஆக பதிவாகியுள்ளது.

இந்நிலையில், மேல் மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. அந்த வகையில், மேல் மாகாணத்தில் மாத்திரம் 9,558 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன் 9 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (4-6)

# 6 திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட மூவர் கைது

## பல லட்சம் பெறுமதியான நகைகள் மீட்பு

(குருமன்காடு)

வடக்கின் மூன்று மாவட்டங்களில் உள்ள 6 இடங்களில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் 3 பேர் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் இருந்து பல லட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளும் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, குருமன்காடு பகுதியில் உள்ள வீடு ஒன்றினை உடைத்து 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளும், தொலைபேசி ஒன்றும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் திருடப்பட்டிருந்தன. இது தொடர்பாக வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவில் பாதிக்கப்பட்டவரால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக விசாரணைகளை முன்னெடுத்தவேளை சம்பவம் தொடர்பில் சந்தேகத்திற்கு இடமான மூவர் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களிடம் முன்னெடுத்த விசாரணைகளில் வடக்கின் மூன்று மாவட்டங்களில் 6 இடங்களில் திருட்டில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது

வவுனியா, புளியங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளும், புளியங்குளத்தில் பிறிதொரு வீடு உடைத்து கிரைண்டர், லப்டொப், லைற் உள்ளிட்ட பொருட்களும்

மன்னார் பகுதியில் வீடு உடைத்து 5 இலட்சம் பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளதுடன், பேசாலை பகுதியில் 3 வயது பிள்ளை அணிந்திருந்த ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சங்கிலி மற்றும் சாவகச்சேரி பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் குறித்த நபர்களால் திருடப்பட்டுள்ளது. திருடப்பட்ட நகைகள் வவுனியாவில் உள்ள தனியார் நிறுவனங்களில் அடைவு வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளதுடன், ஏனைய திருடப்பட்ட பொருட்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த 6 திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த 42 வயது நபர் ஒருவரும், கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய நபர் ஒருவரும், புத்தூர் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய நபர் ஒருவருமாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (4-6-250)

# இரு வெளிநாட்டவருக்கு ஆயுள் தண்டனை

(கொழும்பு)

இரண்டு வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு இலங்கையில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் மற்றும் ஈரான் நாட்டுப் பிரஜைகளுக்கே இவ்வாறு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருளை வைத்திருந்தமை மற்றும் வர்த்தகத்தில் ஈடுபட்டமை ஆகிய குற்றச்சாட்டின் அடிப்படையில் இவர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் இவ்வாறு ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டில் இலங்கைக் கடற்பரப்பிற்கு சொந்தமான சர்வதேச கடல் எல்லையில் இந்த இரண்டு சந்தேக நபர்களையும் கடற்படையினர்கைது செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4-6)

# இராசிபலன்

15.06.2024
ஆனி 01, சனிக்கிழமை
நவமி பின்னிரவு 2.31 மணிவரை
உத்தரம் முற்பகல் 8.48 மணிவரை

சுபநேரம்-2.53-4.23 மணிவரை
இராகுகாலம்-8.53-10.23 மணிவரை

சந்திராஷ்டமம்
அவிட்டம்.

வளவன்

**மேஷம்** — கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கடகம்** — எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**துலாம்** — ஒரு சில வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**மகரம்** — ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதி கிடைக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்** — புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளின் வளர்ச்சிகண்டு பெருமையடைவீர்கள், போசன சுகமுண்டு, பயணங்கள் கைகூடும்.

**சிம்மம்** — தேவையற்ற விரதங்களைத் தவிர்ப்பது நல்லது, பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** — வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், விருந்தினர் வருகையுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள்.

**கும்பம்** — மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கடன் பாக்கிகள் வராமல் தாமதமாகலாம்.

**மிதுனம்** — பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நண்பர்கள் வழியில் சுப விரயங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**கன்னி** — மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிகபிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**தனுசு** — வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கட்டடப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** — உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், களஸ்திர நன்மையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

கடல் போல் செலவழித்தாலும் ஒரு துளியளவு கூட வீணாக்காதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல கோரிக்கைகளை முன்வைத்து பல்கலை ஊழியர்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)


சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். யாழ். பல்கலைக்கழக வளாகத்திலிருந்து பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் பேரணியாக வந்து பிரதான வாயிலில் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.




சம்பள முரண்பாடு, MCA கொடுப்பனவு அதிகரித்து வழங்குதல் போன்ற பல நீண்டகால பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேவேளை வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்வி சாரா ஊழியர்களும் நேற்று பம்பைமடுவில் உள்ள பல்கலைக்கழகத்திற்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-33-250)

# பிரான்ஸ் முக்கியஸ்தர்களை சந்தித்த சிறீதரன் எம்.பி



(பாரீஸ்)

பிரான்ஸ் பொபினி நகரத்தின் நகரசபை முதல்வரும் Seine-Saint-Denis மாவட்ட சபையின் பிரதித் தலைவரும், வெளிநாட்டு வெளிவிவகாரத்திற்கு பொறுப்பானவருமான Abdel Sadi க்கும் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான சந்திப்பு பொபினி நகரசபையில் கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

குறித்த சந்திப்பில் இலங்கையில் நடைபெற்ற தமிழின அழிப்பிற்காக நீதி மற்றும் இலங்கையில் தமிழர்களு நடைபெற்றுவரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு மற்றும் நில அபகரிப்புகள், அரசியல் கைதிகளின் விடுதலை இலங்கையில் தொடர்ந்து நடைபெற்று வரும் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் பற்றிய கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பு பிரான்சில் தொடர்ச்சியாக அரசியல் வேலைத்திட்டங்களை மேற்கொண்டுவரும் தமிழ் பண்பாட்டு வலயம் பிரான்சினால் ஒருங்கிணைக்கப்பட்டது. (4-6)



பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நேற்று முன் தினம் பங்குத்தந்தை ஜெறோ செல்வநாயகம் தலைமையில் சிறப்பாக இடம் பெற்றது.

# அகற்றப்பட்டது குளவிக்கூடு

(தருமபுரம்)

தருமபுரம் மத்திய கல்லூரியில் இருந்த குளவிக்கூடு நேற்று முன்தினம் இரவு வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் முற்று முழுதாக அப்பகுதியில் இருந்து குளவிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் அகற்றப்பட்டது.

மரத்திலிருந்த குளவிக்கூடு கலைந்ததில் 35 பாடசாலை மாணவர்கள் மற்றும் 4 ஆசிரியர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6)

# அனுமதியின்றி பொருட்களை இறக்குமதி செய்து விற்ற வர்த்தகர்

## ரூ.12 ஆயிரம் தண்டம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

முறையான அனுமதியின்றி உணவு உற்பத்தி பொருட்களை இறக்குமதி செய்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் வர்த்தகர் ஒருவருக்கு 12 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து நாட்டில் இருந்து முறையான இறக்குமதி அனுமதியின்றி உணவு உற்பத்தி பொருட்களை இறக்குமதி செய்து யாழில் உள்ள பல பொருள் அங்காடிகளுக்கு விற்பனை செய்து வந்த நபர் ஒருவருக்கு எதிராக மானிப்பாய் பொது சுகாதார பரிசோதகரினால் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு விசாரணையின் போது சந்தேகநபர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து அந்நபரை எச்சரித்துமன்று 12 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது. (4-6-33)

# தண்ணீர்த்தாங்கி ஊர்தி முச்சக்கரவண்டி விபத்து

## ஒருவர் காயம்


(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்லுண்டாய் வெளிப் பகுதியில் தண்ணீர்த்தாங்கி ஊர்தி ஒன்றும் முச்சக்கர வண்டியும் மோதிவித்து இடம்பெற்றுள்ளது. காரைநகர் பிரதேச சபைக்கு சொந்தமான தண்ணீர்த்தாங்கி ஊர்தியுடன் மோதியே முச்சக்கரவண்டி விபத்துக்குள்ளானது.

இதில் காயமடைந்த முச்சக்கரவண்டியின் சாரதி சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த முச்சக்கரவண்டியானது சேதமடைந்துள்ளது. சம்பவம் தொடர்பில் வட்டுக் கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6)

# இரு வாகனங்களில் கடத்தப்பட்ட 70 ஆடுகள், 18 மாடுகள் மீட்பு

## நால்வர் கைது



(குருமன்காடு)

வடக்கில் இருந்து புத்தளம் மற்றும் கொழும்பு நோக்கி இரு வாகனங்களில் கடத்தப்பட்ட 70 ஆடுகள் மற்றும் 18 மாடுகள் ஓமந்தைப் பகுதியில் வைத்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது டன், நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா, ஓமந்தை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயத்திலக தலைமையில் நேற்று ஏ9 வீதியில் விசேட சோதனை ஒன்றை பொலிஸார் முன்னெடுத்தவேளை இரு வாகனங்கள் நிறுத்தாது வீதியூடாக தப்பிச் சென்றுள்ளன.

இதனையடுத்து விரட்டிச் சென்ற பொலிஸார் அவ்விரு வாகனங்களையும் வழிமறித்து சோதனை செய்ததில் வாகனத்தில் சட்டத்திற்கு முரணாக உரிய அனுமதிகளின்றி கடத்தப்பட்ட 70 ஆடுகள் மற்றும் 18 மாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதன்போது கிளிநொச்சியிலிருந்து புத்தளம் நோக்கி கடத்தப்பட்ட 70 ஆடுகளுடன் கூடிய வாகனத்தையும் பொலிஸார் மீட்டுள்ளதுடன் அதில் பயணித்த இரண்டு நபர்களையும் கைதுசெய்துள்ளதுடன் முல்லையிலிருந்து கொழும்பு நோக்கி கடத்தப்பட்ட மற்றைய வாகனத்திலிருந்த 18 மாடுகளுடன் மீட்கப்பட்டதுடன் அதனை கொண்டு சென்ற இரண்டு நபர்களையும் கைது செய்துள்ளனர். இவ்விரண்டு சம்பவங்களிலும் கைது செய்யப்பட்ட நான்கு நபர்களையும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை பலவீனப்படுத்த எதிர்க்கட்சிகள் முயற்சி

## நீதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

பொருளாதாரத்தின் மீது சர்வதேசமும் நாட்டு மக்களும் நம்பிக்கை கொண்டுள்ள நிலையில், நாட்டை பலவீனப்படுத்தும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதை எதிர்க்கட்சியினர் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் வழங்கிய அனுமதி குறித்து கருத்து தெரிவிக்கும் போதே நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு காணப்பட்ட சமூக கட்டமைப்புக்கும் தற்போதைய நிலவரத்துக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றதாகவும் பொருளாதார மீட்சிக்காக முன்னெடுத்த தீர்மானங்களினால் நாட்டு மக்கள் குறுகிய கால நெருக்கடிகளை எதிர்க் கொண்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு இலங்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் முன்வைத்த கடுமையான நிபந்தனைகளை சர்வதேச நாணய நிதியம் ஏற்றுக் கொண்ட பின்னரே மூன்றாம் தவணை விடுவிக்கப்பட்டதாக எதிர்க்கட்சி கூறுவது அடிப்படையற்றது எனவும் குறிப்பிட்டுள்ளார். (4-6)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (1175)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

Western Union WU MoneyGram Ria Money Transfer ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, 077 839 3974


# கடந்த 5 மாதங்களில் 150 யானைகள் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் மனிதனுக்கும் வனவிலங்குகளுக்கும் இடையே அதிகரித்துவரும் முரண்பாடுகளினால் கடந்த ஐந்து மாதங்களில் 150 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன.

உயிரிழந்த யானைகளில் பெரும்பாலானவை இளம் வயதுடையவை ஆகும். இதேவேளை, மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையே அதிகரித்து வரும் முரண்பாடுகளினால் 45 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 2023 ஆம் ஆண்டு மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையேயான முரண்பாடுகள் காரணமாக 488 யானைகள் உயிரிழந்துள்ளன. இதே வேளை, 184 பேர் உயிரிழந்துள்ளனர் என கூறப்படுகிறது. (4-6)

## தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## சொத்து விற்பனைக்கான கூறுவிலைகோரல்

எமது சங்கத்திற்கு சொந்தமான கீழ்க்குறிப்பிட்ட சொத்துக்கள் கூறு விலைகோரி விற்பனை செய்யப்படவுள்ளது. ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் அலுவலக நேரத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி 2024.07.12 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னராக கிடைக்கக்கூடியவாறு **"தலைவர், தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ - து), தெல்லிப்பழை"** எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

1. பாரவூர்தி (லொறி) -42-6157
2. 4 பரப்பு மேட்டுக் காணி (கீரிமலை கொல்லங்கலட்டி வீதியில் அமைந்துள்ளது. தச்சன்காடு அம்பனை வீதியில் மேற்கு எல்லையும், தெற்கு எல்லையில் 12' அகலப் பாதையும் உள்ளது)

**குறிப்பு:**

01. மீளளிக்கப்படாத கேள்விவைப்புத் தொகையாக, பாரவூர்திக்கு ரூபா 500.00 வும், காணிக்கு ரூபா 1000.00 வும் தலைமைக் காரியாலயத்தில் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
02. ஒவ்வொரு சொத்துக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"சொத்து விற்பனை கூறுவிலை காணி அல்லது லொறி"** எனக் குறிப்பிடல் வேண்டும்.
03. தலைமைக் காரியாலயத்தில் பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவத்தில் மட்டுமே விண்ணப்பங்களினை சமர்ப்பிக்க முடியும்.
04. சொத்துக்களைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் வந்து பார்வையிடலாம்.
05. கிடைக்கப்பெற்ற கூறுவிலைகள் 2024.07.13 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு திறக்கப்படும். இதில் விண்ணப்பதாரர்கள் கலந்துகொள்ள முடியும்.

**தொலைபேசி இலக்கம் : 021 205 9250**

**தலைவர், தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), தெல்லிப்பழை.**

**2024.06.15** (சி-591)

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை: மானிப்பாய் பட்டன உப அலுவலகம்**
**விண்ணப்பதாரரின் பெயர் : சண்முகம் பிறேம்குமார்**
**முகவரி : ஆதன இல 7/2 வீதி : கலாமன்ற வீதி வட்டாரம் : 12**

வட்டாரம் **12, கலாமன்ற வீதி** . ஆதன இலக்கம் **7/2** இல் அமைந்துள்ள, உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் **தென் மேற்கு பகுதி "ஆவாரஞ்சாட்டி"** எனும் பெயருள்ள நிலப்பரப்பு **01 குளி 3.15** விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் **இல 7/2, கலாமன்ற வீதி, மானிப்பாயைச்** சேர்ந்த சின்னத்துரை தர்மராஜா **பெண் மல்லிகாதேவி** என்பவரால் இவ் ஆதனத்தின் உரிமையாளர் தாமே என பிரசித்த நொத்தாரிசு **இராமநாதன் ஜெயசிங்கம்** அவர்களால் எழுதப்பட்ட **3289** ஆம் இலக்க **2003.03.18** ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள். மேலும் இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு இராமநாதன் ஜெயசிங்கம் அவர்களால் எழுதப்பட்ட **3319** ஆம் இலக்க **2003.04.01** ஆம் திகதிய உறுதி மூலம் **தர்மராஜா ஜனனி** என்பவருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். இவ் ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு **சி.வீரகத்திப்பிள்ளை** அவர்களால் எழுதப்பட்ட **4489** ஆம் இலக்க **2004.01.18** ஆம் திகதிய உறுதி மூலம் **சண்முகம் பிறேம்குமார்** என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் **சி.காசிப்பிள்ளை** அவர்களால் வரையப்பட்ட **3075** ஆம் இலக்க **2003.12.20** ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் **துண்டு 02** நிலப்பரப்பு **01** குளி **3.15** கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு.

வடக்கு - **K.தம்பிராசா கு.கா. இராசலிங்கம்**
கிழக்கு- **K.விஸ்வலிங்கம்**
தெற்கு - **S.செல்லத்துரை**
மேற்கு - **திருமதி.V.வேலுப்பிள்ளை**

மேற்குறித்த ஆதனத்தை **சண்முகம் பிறேம்குமார்** என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில்விண்ணப்பதாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும்இந்த ஆதன பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென் மேற்குபிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.
(1206)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: LLB, Banker<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், ஆசிரியர் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/13181 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 15 1/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம், வெளிநாடு<br>தொ.இ: G/11311 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 47<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: Teacher<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில்<br>தொ.இ: B/11720 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSc, MBA, Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/12171 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 31 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Bussiness<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள மணமகள்<br>தொ.இ: B/13425 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: அனுஷம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc, Unior Excutive<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant, Lecturer<br>தொ.இ: G/13874 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# இந்தியாவில் முதன்முறையாக காகங்களுக்கு பறவைக்காய்ச்சல்



(டில்லி)

கேரளா மாநிலத்தில் முதன்முறையாக காகங்களுக்கு பறவைக்காய்ச்சல் பாதிப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பறவைக் காய்ச்சல் தாக்கம் இந்தியாவின் மற்ற மாநிலங்களை விட கேரளாவில் தான் அதிகமாக உள்ளது. வாத்து, கோழி ஆகியவற்றின் மூலமாகத்தான் பறவைக்காய்ச்சல் பரவுவதாக கூறப்படுகிறது.

இதன் காரணமாக கடந்த சில நாட்களாக கேரளாவில் வாத்து, கோழிகள் அழிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை மாநிலத்தில் சுமார் 1 லட்சத்துக்கும் அதிகமான பறவைகள் அழிக்கப்பட்டுள்ளன.


பறவைக் காய்ச்சல் மனிதர்களை தாக்காது என கருதப்பட்டு வந்த நிலையில், கடந்த ஏப்ரல் மாதம் 59 வயது நபர் மெக்சிகோ நாட்டில் பறவைக் காய்ச்சல் தாக்கி இறந்ததாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது.

இதனையடுத்து பறவை காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை கேரளாவில் தீவிரப்படுத்தப்பட்டது. பறவைக் காய்ச்சல் பரவுவது குறித்து ஆய்வு செய்ய நிபுணர்கள் குழு அமைக்கப்பட்டது.

கால்நடை மருத்துவ நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மற்றும் விலங்கு நோய்களுக்கான மாநில நிறுவனம் மற்றும் பறவை நோய் கண்டறியும் ஆய்வகத்தின் தொழில்நுட்ப வல்லுநர்கள் பறவைக்காய்ச்சல் பரவுவது குறித்து ஆய்வு செய்து வருகின்றனர். ஆலப்புழா மாவட்டம் முகம்மா கிராமத்தில் தான் இது உறுதி செய்யப்பட்டு உள்ளது.

இங்கு சில நாட்களுக்கு முன்பு காகங்கள் மொத்தமாக இறந்துள்ளன. தொடர்ந்து அந்தக் காகங்களின் உடல் மாதிரியை பரிசோதனைக்காக போபால் அனுப்பியதாகவும், அங்கு பறவைக் காய்ச்சல் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. (4-6)

# கின்னஸ் சாதனை படைத்த உலகின் உயரமான சைக்கிள்



(பிரான்ஸ்)

பிரான்சைச் சேர்ந்த நிக்கோலஸ் பாரியோஸ் மற்றும் டேவிட் பெய்ரூ என்ற 2 வாலிபர்கள் உலகின் மிக உயரமான சைக்கிளை ஓட்டி கின்னஸ் சாதனை படைத்துள்ளனர்.

"ஸ்டார்பைக்" என்ற புனைப்பெயர் கொண்ட அவர்களது சைக்கிள் 7.77 மீற்றர் உயரம் கொண்டது. இது தொடர்பான வீடியோக்கள் இணையத்தில் வெளியாகி உள்ளது. அதில், பாரியோஸ், டேவிட் ஆகிய இருவரும் ஒரு சாலையில் தங்களது சைக்கிளை நவீன எந்திரங்கள் உதவியுடன் உயரமான சைக்கிளாக மாற்றும் காட்சிகள் உள்ளது.

பின்னர் அந்த சைக்கிளின் மீது ஏறி சிறிது தூரம் ஓட்டி செல்லும் காட்சிகளும், அதனை அங்கு இருப்பவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்து பாராட்டும் காட்சிகளும் உள்ளது.

# அபுதாபியில் பறக்கும் டாக்சி வெற்றிகரமாக சோதனை

## அடுத்த ஆண்டு அறிமுகம்

(அபுதாபி)

அமீரகத்தில் போக்குவரத்து மேம்பாட்டுக்காகவும், மாற்று எரிசக்தியை பயன்படுத்துவதை ஊக்கப்படுத்தும் வகையிலும் பல்வேறு முயற்சிகள், திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வரிசையில் நாடு முழுவதும் வரும் கால கட்டங்களில் பறக்கும் டாக்சியை பயன்படுத்தி போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், எரிபொருளை சேமிக்கவும் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டது.

இதில் தற்போது டுபாயைத் தொடர்ந்து அபுதாபியில் அமெரிக்காவின் ஆர்ச்சர் நிறுவனத்தின் மிட்நைட் ஏர் கிராப்ட் என்ற விமானம் அபுதாபியில் பறக்கும் டாக்சியாக இயக்கப்பட உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் தற்போது முதற்கட்டமாக அபுதாபி மாநகராட்சிகள் மற்றும் போக்குவரத்துத் துறை ஒத்துழைப்பில் மிட் நைட் ஏர் கிராப்ட் விமானம் வெற்றிகரமாக வானில் இயக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது.



இந்த விமானம் மேற்புறம் மற்றும் பக்கவாட்டில் சுழலும் இறக்கைகளை வைத்துள்ளதால் ஹெலிகொப்டர் போல செங்குத்தாக நின்ற இடத்தில் இருந்தே மேலெழும்பி பறக்க முடியும். அதேபோல் விமானம் போன்று நேராக செல்லக் கூடியது ஆகும்.

நேற்று முன்தினம் நடந்த சோதனை ஓட்டத்தில் மிட் நைட் ரக விமானம் மணிக்கு 360 கி.மீ வேகத்தில் வானில் பறந்து சென்றது.

இந்த விமானத்தை பயணிகள் மட்டுமல்லாமல் சரக்குகளை ஏற்றி செல்லவும் பயன்படுத்த முடியும். பறக்கும் டாக்சி போக்குவரத்துக்கான ஆதரவை அபுதாபி முதலீட்டு அலுவலகம் அளித்துள்ளது.

அடுத்த ஆண்டில் இது அறிமுகம் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

# இத்தால்... வெடி...

(ரோம்)

**ஜி7 மாநாடு நே... இத்தாலிப் பாராளு... ஏற்பட்ட சம்பவம் ப...**



கடந்த 12 ஆம் திகதி இத்தாலி பாராளுன்ற கீழ் சபையில் இத்தாலியில் உள்ள பிராந்தியங்களுக்கு அதிக சுயாட்சி அளிக்கும் மசோதா மீதான வாக்கெடுப்பு நடத்தப் பட்டது.

(ஒட்டாவா)

கனடா பிரதமர் ட்ரூடோவுக்கு மக்களிடையே ஆதரவு குறைந்து வருவதாக சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.


கனடாவில் சமீபத்தில் Angus Reid என்னும் நிறுவனம் மேற்கொண்ட ஆய்வுகள் கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோவுக்கு, கனடா மக்களிடையே ஆதரவு குறைந்து வருவதைக் காட்டியுள்ளன.

ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில், 28 சதவிகித மக்கள் மட்டுமே ட்ரூடோவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். 66 சதவிகிதம் மக்கள் ஒரு பிரதமராக, ஜஸ்டின் ட்ரூடோவுக்கு தங்கள் ஆதரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லி பாராளுமன்றில் த்தது சண்டை!

நேற்று இத்தாலியில் ஆரம்பமான நிலையில் ராளுமன்றத்தில் எம்.பிக்களிடையே கைகலப்பு வம் பரபரப்பை கிளப்பியுள்ளது.



பிரதமர் ஜியோர்ஜியா மெலோனியின் ஆளும் வலது-சாரி கூட்டமைப்பு கொண்டு வந்த இந்த மசோதாவை எதிர்க்கட்சியான 5 ஸ்டார் இயக்கம் கடுமையாக எதிர்த்தது.

மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பாரா ளுமன்றத்தில் 5 ஸ்டார் இயக்க எம்.பி லியோனார்டோ டோனோ, பிராந்திய விவகாரங்கள் துறை அமைச்சர் ராபர்டோ கால்டெரோலி அமர்ந்திருக்கும் இடத்துக்கு நடந்து சென்று அவரது முகத்தில் இத்தாலியக் கொடியை வீசினார்.

இதனால் ஆளும் வலதுசாரி கூட்டணியில் அங்கம் வகிக்கும் லீக் மற்றும் பிரதர்ஸ் ஆஃப் இத்தாலி கட்சிப் பிரதிநிதிகள் டோனோவிடம் விரைந்து சென்று அவரைப் பிடித்து இழுத்தனர். இதனால் கைகலப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து காயமடைந்த டோனோ அவையில் இருந்து வீல் சேரில் வெளியே அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்த சம்பவத்தை அடுத்து அந்த மசோதா நிறைவேற்றப்படாமல் நிலுவையில் உள்ளது. விரைவில் அதன் மீது மறுவாக்கெடுப்பு நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே பாராளுமன்றத்தில் நடந்த கைகலப்பு தொடர்பான வீடியோ வெளியாகி சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது. (4-6)

# ரஷ்ய சொத்துக்களில் இருந்து உக்ரைனுக்கு 50 பில்.டொலர்



(கீவ்)

ஜி7 நாடுகளின் 50 ஆவது உச்சி மாநாடு நேற்று முன்தினம் இத்தாலியில் அபுலியாவில் ஆரம்பமானது.

உலகின் 7 முக்கிய முதலாளித்துவ நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மன் மற்றும் கனடா, ஜப்பான் ஆகிய நாடுகள் இதில் செயற்படுகின்றன.

குறித்த மாநாட்டில் இம்முறை இந்திய பிரதமர் நரேந்திர மோடி, உக்ரைன் ஜனாதிபதி மற்றும் துருக்கி ஜனாதிபதி ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்துக்கொண்டனர்.

இந்த மாநாட்டில் ரஷ்ய இறையாண்மைச் சொத்துக்களிலிருந்து உக்ரைனுக்கு 50 பில்லியன் டொலர் கடன் தொகைகளை வழங்க ஜி 7 நாடுகளின் தலைவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

ரஷ்யாவுடனான போரில் உக்ரைனுக்கான ஒத்துழைப்புக்களை இரட்டிப்பாக்குதல், சீனாவின் அரசியல் மற்றும் பொருளாதார எதிர்பார்ப்புக்களுக்கு எதிராக ஒருமித்த நிலைப்பாட்டை பிரதிபலித்தல் என்பன இந்த மாநாட்டின் இலக்கு என குறிப்பிடப்படுகின்றது. (4-6)

# லிபியாவில் தங்கி இருந்த 163 அகதிகள் மீட்பு!

(திரிபோலி)

லிபியாவில் தங்கி இருந்த 163 அகதிகள் சிறப்பு விமானம் மூலம் பங்களாதேஷிற்குத் திரும்பியுள்ளதாக இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது

அதன்படி ஆபிரிக்க நாடான லிபியாவில் பல்வேறு கிளர்ச்சிக் குழுக்கள் செயற்படுகின்றன. மேலும் கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக ஏராளமானோர் அங்கிருந்து கடல் வழியாக சென்று ஐரோப்பிய நாடுகளில் குடியேறுகின்றனர்

எனவே அவர்களை மீட்பதற்கான முயற்சி நடைபெற்று வந்த நிலையில் லிபியாவில் தங்கி இருந்த இவர்கள் பங்களாதேஷ் திரும்பியுள்ளனர்

மேலும் இந்த அமைப்பானது இதுவரை லிபியாவில் தங்கி இருந்த சுமார் 80 ஆயிரம் அகதிகள் தங்களது தாயகம் திரும்ப உதவி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6)

# கனடா பிரதமர் ட்ரூடோவுக்கு குறைந்து வரும் ஆதரவு

இல்லை என தெரிவித்துள்ளனர். கருத்துக்கணிப்புகளிலோ, ஆளும் லேபர் கட்சியைவிட எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சிக்கு ஆதரவு அதிகரித்துள்ளது தெரியவந்துள்ளது.

மக்கள் என்னை விரும்பவில்லை என்றாலும், கனடாவும், கனேடியர்களும் அவர்களுடைய பிள்ளைகளும் நன்றாக இருக்கிறார்கள் என்பதை உறுதி செய்ய என்ன செய்வது என்பதை யோசித்து, அதற்காக முயற்சி செய்துகொண்டே இருப்பேன் என்று கூறியுள்ளார் ட்ரூடோ. (4-6)



# டொலர் மற்றும் யூரோவிற்கு தடை விதித்தது ரஷ்யா

(மொஸ்கோ)

டொலர்கள் மற்றும் யூரோக்களை பயன்படுத்தி வர்த்தகத்தை நிறுத்த ரஷ்யா முடிவு செய்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்நியச் செலாவணி பரிவர்த்தனைகள், உலோகங்கள் வர்த்தகம், பங்குகள் மற்றும் பத்திரங்களுக்கு டொலர் மற்றும் யூரோவை இனி பயன்படுத்தப்போவதில்லை என்று மொஸ்கோ பங்குச்சந்தை அறிவித்துள்ளது.

அமெரிக்காவினால் ரஷ்யாவிற்கு எதிராக புதிய பொருளாதார தடைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் ரஷ்யா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் நலத்திட்டங்கள் தொடர்பில் ஆளுநர்களுக்கு ரணில் அறிவுரை

(கொழும்பு)

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற நலத் திட்டங்களை வினைத்திறனுள்ளதாக்கி அதன் பலன்களை மக்களுக்கு வழங்குவதற்கு மாகாண ஆளுநர்கள், முழு மூச்சுட செயற்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாகாண ஆளுநர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம் பெற்ற கலந்துரை யாடலில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார். மாகாண மட்டத்தில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையை விரைவாக தீர்க்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற் றும். இலவச காணி உரிமைத் திட்டத்தின் வினைத்திறன் குறித்தும் இதன் போது கலந்துரையாடப் பட்டது. இலவச காணி உறுதி களை வழங்கும் வேலைத்திட்டத்தை வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்கு கிராம உத்தியோகத் தர்களுக்கு மேலதிகமாக வேறொரு குழுவிற்கு அதிகாரத்தை வழங்கு வதன் மூலம் நடமாடும் சேவைகளை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியத்தை ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

இது தொடர்பில் மக்களை ஆர் வமடையச் செய்து அவர்களுக்கு அந்த நன்மையை வழங்க வேண்டிய பொறுப்பு பிரதேச செயலாளர்களின் பொறுப்பையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது நினைவுபடுத்தினார். (4-6)

# இவ்வருட இறுதிக்குள் புதிய தேசிய அ.அட்டை

(கொழும்பு)

பயோமெட்ரிக் தரவுகளுடன் கூடிய புதிய இலத்திரனியல் அடையாள அட்டை இந்த ஆண்டு இறுதிக்குள் அறிமுகப்படுத்தப்படும் என ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது

முதன்முறையாக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் நபர்களுக்கு முதலில் இந்த அடையாள அட்டை வழங்கப்படும் என ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி தெரிவித்துள்ளார். அதற்கமைய, தற்போதைய நிலையில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் பாடசாலை மாணவர்களுக்கு உறுதிப்படுத்தல் கடிதம் மட்டுமே வழங்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் அனைத்து குடிமக்களுக்கும் ஒரு வருடத்திற்குள் பயோமெட்ரிக் தரவுகளுடன் கூடிய புதிய இலத்திரனியல் அடையாள அட்டை வழங்கப்படும் என ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளர். எனினும் தற்போது வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையை இழந்தவர்களுக்கு வழமை போன்று இதற்கு முன்னர் வழங்கப்பட்ட அடையாள அட்டை வழங்கப்படும். ஒரு நாள் சேவை அல்லது பொதுச் சேவைகளின் கீழ் ஆட்பதிவுத்திணைக்களத்தில் இதனை பெறலாம் என மேலும் தெரிவித்துள்ளார். (4-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 350 | 400 | 250-400 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 185 | 210 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 200 | 200 | 250 |
| தக்காளி | 600 | 600 | 450 | 550 | 550 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 160 | 150 | 100-120 | 160 |
| கோவா | 300 | 350 | 300 | 250 | 300 |
| கரட் | 350 | 450 | 450 | 350 | 450 |
| பூசணி | 140 | 150 | 120 | 120 | 160 |
| புடோல் | 300 | 300 | 200 | 150 | 260 |
| வாழைக்காய் | 180 | 150 | 150 | 130-170 | 160 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 200-450 | 300-500 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 280 | 250 | 230 | 250 |
| பாகற்காய் | 800 | 1000 | 1200 | 600 | 1000 |
| வெண்டக்காய் | 200 | 300 | 200 | 220 | 320 |
| கருணைக் கிழங்கு | 200 | 160 | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 450 | 500 | 400 | 300-550 | 300 |
| லீக்ஸ் | 650 | 650 | 650 | 550 | 650 |
| பீற்றூட் | 500 | 500 | 600 | 300 | 600 |
| கறிமிளகாய் | 650 | 550 | 550 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 600 | 300-450 | 600 |
| போஞ்சி | 700 | 800 | 750 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | -- | -- | 360 |
| கீரை - 1 பிடி | 100 | 150 | 80-100 | 120-150 | 150 |
| தேசிக்காய் | 800 | 1000 | 1200 | 900-1150 | 1400 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 60-100 | 60-110 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 500 | 500 | -- | 400 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 600 | -- | 700 |
| முள்ளங்கி | 120 | 200 | -- | 100 | 400 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 150 | 90 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 100 | 80 | 60 |
| ஈரப்பலா | 180 | 180 | -- | 100 | 300 |

# இன்று ஒரு தகவல் 153



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# மருந்தில் கவனம்

எனக்குத் தெரிந்த ஒருவர் பொட்டுக்கடலை சாப்பிடுவது போல மருந்து மாத்திரைகளைச் சாப்பிடுவார். ஏழெட்டு விதமான மாத்திரைகளை உள்ளங்கையிலே எடுத்துக் கொள்வார். அப்படியே வாயில் போட்டு தண்ணீரை ஊற்றி முழுங்குவார்.

சரி இவ்வளவும் வைத்தியரிடம் கேட்டு விட்டு வாங்கினாரா? என்றால் அதுவும் இல்லை. மருந்து மாத்திரைகளின் பெயர்கள் எல்லாம் இவருக்கு மனப்பாடமாகத் தெரியும். கடைக்குச் சென்று கடலை மிட்டாய் வாங்கிக் கொண்டு வருவது போல் இவர் மருந்து வாங்கிக் கொண்டு வருவார்.

இது நல்ல பழக்கம் என்று நினைக்கின்றீர்களா? விவரத்துடன் சாப்பிடுகின்ற மருந்து வியாதியைப் போக்குகிறது. விவரம் இல்லாமல் சாப்பிடுகின்ற மருந்து வியாதியை உண்டாக்கி விடுகின்றது. நாம் சாப்பிடுகின்ற மருந்துகளைப் பற்றி இரண்டு விடயங்களை முக்கியமாக தெரிந்து வைத்திருக்க வேண்டும். இது மிகவும் அவசியம். முதல் விடயம் Side effects. அதாவது மருந்தினால் ஏற்படக் கூடிய வேண்டாத விளைவுகள்.

பொதுவாக பலருக்கு ஒவ்வொரு மருந்தும் ஏதாவது வேண்டாத விளைவை கொஞ்சமாவது உண்டாக்கியே தீரும். வீரியம் குறைந்த மருந்துகளைக் கூட தவறான முறையில், நீண்ட காலத்திற்கு, அளவிற்கு மீறி அதிகமாக சாப்பிட்டால் வேண்டாத விளைவுகள் உண்டாகும். அதுமட்டுமல்லாது ஒரு மருந்து வெவ்வேறு மனிதர்களுக்கு வெவ்வேறு விதமான வேண்டாத விளைவுகளை ஏற்படுத்தும். இது நாம் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான விடயம். இரண்டாவது என்னவென்றால், வைத்தியர்கள் கூறுகின்ற ஆலோசனைகளை சரியாகக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். பலர் வைத்தியரிடம் செல்வார்கள் மருந்து சீட்டுகள் எல்லாம் வாங்குவார்கள். ஆனால் அந்த மருந்தை எந்த அளவில் எப்போது சாப்பிட வேண்டும் என்று வைத்தியர் கூறுவதை சரியாக காதிலே வாங்கிக் கொள்வது இல்லை அல்லது புரிந்து கொள்ளவது இல்லை.

சிலர் எப்படி என்றால் இரண்டு மாத்திரை சாப்பிடுவதற்குப் பதிலாக நான்கு மாத்திரைகள் சாப்பிட்டால் வியாதி சீக்கிரம் சரியாகி விடும் என்று நினைத்துக் கொள்வார்கள். இன்னும் சிலர் உடல் சிறிது சரியாகியவுடன் மருந்து சாப்பிடுவதை நிறுத்தி விடுவார்கள். இது எல்லாம் மிகவும் ஆபத்தான விடயங்கள். அதனால் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நாம் சர்வ சாதாரணமாக வாங்கி சாப்பிடுகின்ற சில மாத்திரைகளைப் பற்றி கொஞ்சம் தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது.

அஸ்பிரின் சம்பந்தப்பட்ட மாத்திரைகள் சாலிசிலிக் அமிலத்தினது ஒரு வேதி விளைபொருள் இது. காய்ச்சல், வீக்கம், தலைவலி, மூட்டுவலி, உடல்வலி இவற்றை எல்லாம் தணிக்கின்ற குணம் இதற்கு உண்டு. இரத்தத்தில் கட்டி உண்டாவதை இது தடுக்கின்றது. அதனால் இதயத்தாக்குதல் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் குறைகின்றது. எல்லாம் சரி. இருந்தாலும் 12 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவர் கண்காணிப்பு இல்லாமல் அஸ்பிரின் மருந்துகளை கொடுக்கக் கூடாது. பெரியவர்க ளுக்குக் கூட இது வேண்டாத விளைவுகளை ஏற்படுத்தும். வயிற்றுவலி, வாந்தி, சில சமயம் வயிற்றுப்புண் எல்லாம் உண்டாகிவிடும். இதை எல்லாம் தவிர்க்க வேண்டும் என்றால் வெறும் வயிற்றில் அதைச் சாப்பிடக் கூடாது. அதைச் சாப்பிடும் போது ஒரு பெரிய டம்ளர் நீரை தாராளமாக குடிக்க வேண்டும். அளவிற்கு மீறி அஸ்பிரின் சாப்பிடுபவர்கள் காதில் "கிர்..கிர்.." என்று ஒரு சத்தம் வரும். மருந்தை நிறுத்தினால் அது நின்று விடும்.

இதனால் ஒவ்வாமை கூட வரலாம். தோல் தடித்து விடும். தும்மல், நெஞ்சில் இறுக்கம் இவையும் வரலாம். சாதாரண தலைவலிக்கு எல்லாம் ஆறுமணி நேரத்திற்கு ஒரு தடவை 600 மில்லிக்கிராம் அளவிற்கு அஸ்பிரின் சாப்பிடலாம். இது போல் தொடர்ந்து பத்து நாட்களுக்கு மேல் சாப்பிடக் கூடாது. காய்ச்சலிற்கு மூன்று நாட்கள் வரைக்கும் சாப்பிடலாம்.

அஸ்ப்பிரின் சாப்பிட்ட பின் வேறு மருந்து சாப்பிட வேண்டியிருந்தால் அல்லது ஏதாவது அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருந்தால் அஸ்ப்பிரின் சாப்பிடுகின்ற விடயத்தை வைத்தியரிடம் சொல்ல வேண்டும். பரசிட்டமோல் இதுவும் நாம் சுலபமாக வாங்கி சாப்பிடுகின்ற ஒரு மருந்து. சிறிய சிறிய வலிகள் வேதனைகள் இவற்றிற்கெல்லாம் நிவாரணம் கொடுக்கும். காய்ச்சலைக் கூடத் தீர்க்கும். ஆனால் அஸ்ப்பிரினிற்கு இருக்கின்ற வீக்கம் தணிக்கின்ற குணம் இதற்கு இல்லை.

இது வயிற்றுப்புண்ணை உண்டாக்காது. ஆறுமணிக்கு ஒரு தடவை 500 மில்லிக்கிராம் அளவிற்கு சாப்பிடலாம். இதை விட குறைந்த அளவே பலருக்குப் போதும். இதை அதிகமாக சாப்பிட்டால் என்ன நடக்கும் தெரியுமா? கடுமையான ஈரல் சேதம் ஏற்பட்டு உயிருக்கு ஆபத்து கூட ஏற்படலாம். அஸ்பிரின் பரசிட்டமோல் அவை இரண்டும் கலந்திருக்கின்ற மருந்துகளை அதிகமாகவும் நீண்ட காலத்திற்கும் சாப்பிட்டால் சிறுநீரக நோய்கள் வரும். இரண்டில் ஏதாவது ஒன்றை மட்டும் ஒரு சமயத்தில் சாப்பிடுவது பாதுகாப்பானது.

அடுத்தது Anti biotics - நுண்ணுயிர் கொல்லிகள். இது சிறிது தாமதமாக செயற்படுகின்ற ஒன்று. சிறிது குணமாவது தெரிந்தவுடன் பாதியில் நிறுத்திவிடக் கூடாது. சிலவற்றை வெறும் வயிற்றில் தான் சாப்பிட வேண்டும். சிலவற்றை சாப்பாட்டிற்குப் பின் தான் சாப்பிட வேண்டும். இது சிலருக்கு வயிற்றுப் போக்கை உண்டாக்கி விடும். மருந்து சாப்பிட்டுக் கொண்டு மதுவையும் சாப்பிடக் கூடாது. கருவுற்ற பெண்கள் வைத்தியரைக் கேட்காமல் எந்த மருந்தையும் சாப்பிடக் கூடாது. மருந்தை விலை கொடுத்து வாங்கலாம். வியாதியை விலை கொடுத்து வாங்கலாமா சார்!

ஒருவர் இப்படித்தான் எல்லாவற்றிற்கும் அவரே வைத்தியம் செய்து கொள்வார். அவருக்கு ஒரே நேரத்தில் பல கோளாறுகள் வந்து விட்டது. உடனே கடைக்குப் போனார். காய்கறி வாங்குவது போல ஒரு பை நிறைய மருந்து மாத்திரைகளை வாங்கிக் கொண்டு வந்தார். "இவ்வளவு மாத்திரைகள் இருக்கிறதே இதை எல்லாம் எப்படி சாப்பிடுவது? [illegible] பின்னா?" என்று ஒருவர் கேட்டார். "அதைப் பற்றி கவலை [illegible] எனக்கு ஆகாரமே இது தான்" என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்தி கூட்டம்

(கருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட விசேட அபிவிருத்தி கூட்டம் கடற்றொழில் அமைச்சரும் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.



கிளிநொச்சி மாவட்டத்தில் பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடி தீர்வினை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் குறித்த விசேட அபிவிருத்தி கூட்டம் நடைபெற்றது.

இதில் காணி, மீள் குடியேற்றம், வாழ்வாதார உதவித்திட்டங்கள், அபிவிருத்தி செயற்றிட்டங்கள் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் குறித்தும் ஆராயப்பட்டது. இக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரச அதிபர் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்ட செயலாளர், உதவித்திட்டமிடல் பணிப்பாளர்கள், பிரதேச சபை செயலாளர்கள், மாவட்டஅபிவிருத்தி குழும் தலைவரின' இணைப்பாளர், சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள், விடய உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகள் பிரதிநிதிகள், பொதுமக்கள், எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-6-100-316)

## ஹெரோயின் போதைப்பொருள்
# உடமையில் வைத்திருந்தவர் கைது

(கண்டாவளை)

கிளிநொச்சியில் 2 கிராம் 100 மில்லி கிராம் அளவு கொண்ட ஹெரோயினுடன் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்

கிளிநொச்சி மீனாட்சியம்மன் கோவிலுக்கு அண்மித்த பகுதியில் கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்த சோதனையின் போது இரண்டு கிராம் மற்றும் 100 மில்லி கிராம் அளவு கொண்ட ஹெரோயினை உடமையில் வைத்திருந்த சந்தேகத்தில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்

கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸ் அதிகாரி கே.பி சானக்க பொலில் உத்தியோகத்தர்களான சமன் பவிதன் குமாரசிறி உள்ளிட்ட குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது குறித்த நபர் கைது செய்யளப்பட்டுள்ளார்.

குறித்த நபரை சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் முன்னிறுத்தி நீதிமன்றத்தில் ஆஜர்ப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (4-6-315)

# விண்ணப்பம் கோரல்

(கிளிநொச்சி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளிநொச்சி மாவட்ட காரியாலயத்தின் கீழ் இயங்கும் பயிற்சி நிலையத்தில் இளைஞர் யுவதிகளுக்கான தையல் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

பயிற்சிக்காலம் 6 மாதம் ஆகும். அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்படும். குறித்த தையல் பயிற்சி நெறியானது எதிர் வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் தங்கள் சுயவிபரத்தை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் கிளிநொச்சி, 155 ஆம் கட்டை ஏ-9 வீதி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், நிலையப்பொறுப்பதிகாரி பயிற்சி நிலையம் எனும் முகவரிக்கு தபால் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ மற்றும் nysc.kili2013@ gmail.com எனும் மின்னஞ்சல் ஊடாகவும் அனுப்பி வைக்க முடியும்.

மேலதிக தகவல்களுக்கு 077 358 9165 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4-6)

# 1 மில். அமெரிக்க டொலருடன் கிளிநொச்சியில் மூவர் கைது

(கண்டாவளை)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட ஏ-9 வீதி கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக 1 மில்லியன் அமெரிக்க டொலருடன் மூன்று சந்தேக நபர்களை நேற்று முன்தினம் இரவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சி இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து நேற்று முன்தினம் இரவு குறித்த பகுதியில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்ட வேளை மோட்டார் சைக்கிளில் வந்தவர்களை சோதனைக்கு உட்படுத்திய போது அவர்களிடமிருந்து ஒரு மில்லியன் அமெரிக்க டொலரும் அவ் டொலரை மாற்றுவதற்க்கான சான்றிதழ் என்பனவும் மீட்கப்பட்டுள்ளதுடன். மூவரைக் கைது செய்து கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-100-315)


## வாடகைக்கு

"சின்னையா முருகேசு சிவபாலன்" கட்டடத்தொகுதியிலுள்ள கடைகள் வாடகைக்கு உண்டு.


A-9 வீதி,
கரடிப்போக்கு,
கிளிநொச்சி.
தொ.பே- 077 448 1433


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3143

தனுஷ்கா




ராதிகா




சர்மிளா





மது




தனுஷா




யதுஷா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பொன்னியின் செல்வன் காவியத் தொடர்

பாகம் - 3

508



தீபம் எரிவது விட்டில் பூச்சிகளுக்காக அல்ல. தீபம் எரிந்து தன்னைச் சுற்றிலும் ஒளி வீசி ஜோதி மயமாகச் செய்கிறது! அசட்டு விட்டில் பூச்சிகள் அதைக் கனி என்று நினைத்துக் கொண்டு சென்று விழுந்து மாய்கின்றன."

"ஒரு சிறிய காற்று குப் என்று அடித்தால் தீபம் அணைந்து விடுகிறது. வாயினால் ஊதிக்கூட அணைத்துவிடலாம். தீபத்தின் சக்தி அவ்வளவுதான்!"

"தீபம் அணைந்துவிடும் ஆனால் பூரணசந்திரனை யார் அணைக்க முடியும்? பூரணசந்திரன் சமுத்திர ராஜனுக்காக உதயமாகவில்லை. இயற்கை நியதியின்படி சந்திரன் உதயமாகிறது. அதன் குளிர்ந்த நிலா ஒளியை வானமும் பூமியும் மகிழும்படி பரப்புகிறது. ஆனால் பேதைக்கடலைப் பாருங்கள்! பூரண சந்திரனைக் கண்டு கடல் எதற்காக அப்படிக் கொந்தளிக்க வேண்டும்? எட்டாத பழத்துக்கு ஏன் கொட்டாவி விட்டுத் தவிக்க வேண்டும்?"

"பல்லவ குல மன்னர்களின் கவிதா ரசனையைப் பற்றியும் கற்பனைத் திறனைப்பற்றியும் ரொம்பவும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவையெல்லாம் உண்மையென்பதாக இப்போதுதான் உணர்கிறேன்."

"புராணங்களிலும், காவியங்களிலும் நான் படித்ததையும் கேட்டதையும் நேற்றுவரை நம்பவில்லை. இன்றைக்குத்தான் எனக்கு நம்பிக்கை பிறக்கிறது."

"எதைப்பற்றிச் சொல்கிறீர்கள்?" பெண் உருவங் கொண்டவர்கள் சிலர் வானத்தையும் பூமியையும் தங்கள் காலடியில் போட்டுக்கொள்ளும் சக்தி பெற்றவர்கள் என்று கேட்டிருக்கிறேன். பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்த அசுரர்கள், அமுதபானம் செய்ய வேண்டிய சமயத்தில் மோகினியினால் ஏமாந்து போனார்கள். சுந்தோ பசுந்தர்கள் ஒரு பெண் நிமித்தமாக அடித்துக்கொண்டு செத்தார்கள்.

மேனகையினால் விசுவாமித்திரர் தவங் கெட்டது. கோவலன் மாதவியின் மோக வலையில் விழுந்து கிடந்தான். தசரதர் கையேயிக்காக ராமனைக் காட்டுக்கு அனுப்பினார். எகிப்து நாட்டு ராணியின் காரணமாக மகத்தான ரோம சாம்ராஜ்யம் அழியத் தொடங்கியது."

போதும் ஐயா! போதும்! இந்த உதாரணங்களையெல்லாம் எதற்காகச் சொல்கிறீர்கள்?"

"தெரியவில்லையா, தேவி! யாருக்கு உதாரணமாகச் சொல்கிறேன் என்று உண்மையாகத் தெரியவில்லையா?"

"எனக்கு உதாரணமாகச் சொல்கிறதாயிருந்தால், அதைப் போல் பெரிய தவறு நீ வேறு செய்ய முடியாது."

"தவறு ஒன்றுமில்லை. அவர்களுடைய சக்தியைக் காட்டிலும் தங்கள் சக்தி குறைந்தது அன்று."

"உம்முடைய வாய்மொழியே உமக்கு விரோதமாயிருக்கிறது.""எப்படி,தேவி?"

"பழுவூர் அரசரை நான் வேண்டுமென்றுதான் கப்பலுக்கு அனுப்பினேன், உம்மிடம் ஒரு விடயத்தைப் பற்றிக் கேட்பதற்காக."

தங்கள் நோக்கத்தைப் புரிந்துகொண்டுதான் நானும் அவருடன் போகாமல் இங்கேயே தங்கினேன்."

"வீரபாண்டியனை ஒரு பெண் காப்பாற்ற முயன்றாள் என்றும் ஆதித்த கரிகாலன் அதைப் பொருட்படுத்தவில்லையென்றும் நீர் சொன்னீர் அல்லவா?"

"ஆம் சொன்னேன்."

"காப்பாற்ற முயன்ற பேதைப்பெண் யார் என்று தெரியுமா?"

"இப்போது பழுவூர் அரண்மனையின் ஜோதியாக விளங்கும் இளைய ராணி நந்தினி தேவிதான்.


"நீர் சற்றுமுன் வர்ணித்தபடி எனக்கு அவ்வளவு சக்தி இருந்திருந்தால் நான் காப்பாற்ற விரும்பிய மனிதரின் உயிரைக் காப்பாற்றி இருக்க மாட்டேனா? அது ஏன் என்னால் முடியாமல் போயிற்று.

(தொடரும்)



## சிறுவர் அரங்கம்

### சாமியாரும் ஏமாற்றுச் சீடனும்



முன்னொரு காலத்தில் ஒரு கிராமத்தில் ஒரு சாமியார் இருந்தார். அவர் பூஜை மற்றும் பிரார்த்தனைகள் செய்து கொஞ்சப் பணம் சம்பாதித்து கொண்டு இருந்தார். அவரிடம் நிறையவே பணம் இருந்தது. அவர் அந்த பணத்தை எல்லாம் ஒரு பையில் போட்டு தன் கூடவே வைத்திருப்பார்.

அந்த கிராமத்தில் இருந்த ஒரு திருடன், கொஞ்ச நாளாக அந்த சாமியாரது பணத்தை திருட திட்டம் போட்டு கொண்டு இருந்தான். இந்தத் திருடன் ஒரு நாள் அந்த சாமியாரிடம் போய், "சாமியாரே என்னை உங்களுடைய சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கேட்டான். அந்த சாமியார் உடனே சரி என்று சொல்லி விட்டார்.

இந்தத் திருடன் மிகவும் நல்லவன் போலவும், ஒன்றும் தெரியாத அப்பாவி போலவும் நடித்து இந்த சாமியார் மனதில் இடம் பிடிக்க நினைத்தான். ஒரு நாள் இன்னொரு சீடன் பக்கத்து கிராமத்தில் பூஜை இருப்பதாக சொல்லி அந்த சாமியாரை கூப்பிட்டான். அவரும் சரி என்று சொல்லிவிட்டு, அந்த திருடனை தான் கூடவே கூட்டிக் கொண்டு அந்தக் கிராமத்துக்குப் புறப்பட்டார்.

அவர்கள் போற வழியில் ஒரு நதியை பார்த்தார்கள். அப்போ அந்த சாமியார் அந்தத் திருடனிடம், "மகனே, நான் இந்த நதியில் குளிக்க போகிறேன். அதனால் என்னுடைய பொருளையும், பணத்தையும் பத்திரமாக பார்த்துக்கொள்" என்று சொல்லிவிட்டு அந்த திருடன் கையில் எல்லாவறறையும் கொடுத்துவிட்டு அவர் அந்த நதியில் குளிக்கப் போனார்.

இப்படி ஒரு நேரத்தை எதிர் பார்த்து இருந்த அந்தத் திருடன், சாமியார் தன் கிட்ட கொடுத்த எல்லா பொருட்களையும், பணத்தையும் எடுத்துக் கொண்டு ஓடிவிட்டான். அந்த சாமியார் குளித்து விட்டு கரைக்கு வந்து பார்த்த போது அவருடைய சீடனை எங்கும் காணவில்லை.

அப்போது தான் அவருக்குத் தெரிந்தது அவன் தன்னுடைய பணத்தை எடுத்துக் கொண்டு ஓடி விட்டான் என்று அப்போது தான் அந்த சாமியார் ஒரு விடயத்தை தெரிந்து கொண்டார், "முன்பின் தெரியாதவர்களை எப்போதும் கண் மூடித்தனமாக நம்ப கூடாது" என்று.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பணம் தலை குனிந்து பணியாற்றும் அல்லது தலை குப்புறத் தள்ளி விடும்.
– ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இன்னமும் நிதானப்படாத பொருட்களின் விலைகள்

நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தத்துக்குப் பின்னர் பொருட்கள் சேவைகளின் விலைகள் கண்டபாட்டில் எகிறின என்பது தெரிந்ததே.

இவ்வாறு ஏற்பட்ட விலையேற்றம் படிப்படியாகத் தணியும் என எதிர்பார்த்த போதிலும் ஏறிய விலைகள் இறங்கா என்பதுபோல நிலைமை இன்னமும் இங்கு தணியவில்லை.

இதை நாம் கூறும்போது இஃது நாடு முழுமைக்குமானதெனக் கருதிவிடக் கூடாது.

மாறாக, வட மாகாணத்திலேயே ஏறிய விலைகள் இன்னமும் குறையவில்லை என்ற குற்றச்சாட்டை பாவனையாளர்கள் முன் வைக்கின்றனர்.

ஆம், கொழும்பில் பொருட்களின் விலைகள் கணிசமாகக் குறைவடைந்துள்ள போதிலும் வட மாகாணத்தில் பொருட்களின் விலைகள் குறையவில்லை என்பது குற்றச்சாட்டாகக் குறித்துரைக்கப்படுகிறது.

அதாவது மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட வாகனங்களின் உதிரிப்பாகங்கள் கண்டபாட்டில் விலை உயர்த்தப்பட்டுள்ளதாகவும் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் கணிசமான விலை வித்தியாசம் உள்ளதாகவும் ஒப்பிட்டுக் கூறப்படுகிறது.

இதேபோன்றுதான் கட்டப் பொருட்களின் விலைகளும் நிதானமிழந்துள்ளன.

அதாவது கடைக்குக் கடை கட்டப் பொருட்களின் விலைகள் வித்தியாசப்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

நிலைமை இவ்வாறு நகருமாயின், தென்பகுதியில் உள்ள நிறுவனங்களுக்கான கேள்வி வட மாகாணத்தில் ஏற்படவே செய்யும்.

ஒரு காலத்தில் நுகர்பொருட்களின் விலைகளைக் கண்டபடி உயர்த்தி விற்றதன் காரணமாக, வட மாகாணத்தில் பல்பொருள் அங்காடிகள் தோற்றம் பெற்றன.

இப்போது குறித்த பல்பொருள் அங்காடிகளில் பெருமளவான நுகர்வோர் பொருட்கொள்வனவில் ஈடுபடுவதைக் காண முடியும்.

நீண்ட காலமாக இருந்த தமது வாடிக்கையாளர்களை அதிகரித்த விலையினூடாகக் கந்தறுத்தபோது, வாடிக்கையாளர்கள் வெறுப்படைந்து பல்பொருள் அங்காடிகளை நோக்கி நகர்ந்தனர். இதன் காரணமாக வட மாகாணத்தில் எத்தனையோ நுகர்பொருட் கடைகள் நட்டமடைந்து மூடுவிழாக் கண்டன.

ஆக, இங்குதான் ஒரு விடயத்தை நம் வர்த்தகப் பெருமக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதாவது வட மாகாணத்தில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு நிதானமான விலையில் பொருட்களை விற்பனை செய்ய வேண்டும்.

இதைவிடுத்து நீங்கள் நினைத்தபாட்டில், நினைத்த விலையில் பொருட்களை விற்பனை செய்வீர்களாயின், அதன் விளைவு தென்பகுதிக்கான வர்த்தக வாய்ப்பை வட பகுதி வழங்கிவிடும்.

எனவே பொருட்களின் விலைகளை நிதானப்படுத்துவதில் விசேட கவனம் செலுத்துங்கள்.

இல்லையேல் நிலைமை படுமோசமாகுவதை எவராலும் தடுக்க முடியாமல் போகும்.

### சஜித் கூறுவதுபோல் 13 ஐ அமுல்படுத்தினால்

# நாடு பிரிவினை வாதத்திற்கு

## பலிக்கடா ஆகும் - ஜயந்த சமரவீர எம்.பி

(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா, 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக கூறுவது, நாட்டை பிரிவினைவாதத்திற்குப் பலியாக்கும் என தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் வாக்குகளை இலக்கு வைத்து பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி நாட்டை பிரிவினைவாதத்திற்கு பலிக்கடா ஆக்க வேண்டாம் என தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜயந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

13வது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படும் என எதிர்கட்சித் தலைவர் உறுதியான மற்றும் வெளிப்படையான அறிக்கையை வடமாகாண மக்களுக்கு விடுத்துள்ளார்.

இதற்கு பலத்த எதிர்ப்பு இருந்ததால் முன்னைய எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட வெளிப்படையாக அறிவிக்கவில்லை என்பது மிகத் தெளிவாகிறது.

எவ்வாறாயினும் இலங்கையின் தற்போதைய அனர்த்த நிலைமை காரணமாக இம்முறை அந்த எதிர்ப்பு வலுவாக வெளிப்படவில்லை. எனினும் வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் வாக்குகளை இலக்கு வைத்து அவர் இவ்வாறானதொரு கருத்தை வெளியிடுகின்றார் என்பது மிகத்தெளிவாகும்.

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தத்தை அவர் தனிப்பட்ட பிரேரணையாக முன்வைத்த போது 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கான இரண்டு சரத்துக்கள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் கோரிக்கைக்கு அமைவாக அந்த திருத்தத்தில் உள்வாங்கப்பட்டிருந்ததை நாம் நினைவுகூருகின்றோம்.

முன்னதாக 1987ல் இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கு அவரது தந்தை தனது மறுப்பைத் தெரிவித்தாலும், பின்னர் 13வது திருத்தத்திற்கு ஆதரவாக கையை உயர்த்தியதையும் நினைவில் கொள்கிறோம்.

ஆனால் எந்த நேரத்திலும் 13வது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படும் என அவர் அறிவிக்கவில்லை. அவர் ஒரு ஜனாதிபதியாக கூட அதைச் செய்ய முயற்சிக்கவில்லை. குறுகிய அரசியல் நலன்களுக்காக அறிக்கைகளை வெளியிடுவதற்கு முன், குறிப்பாக அவரது தந்தையின் ஆட்சிக் காலத்தில் 13 வது திருத்தத்தின் வரலாற்றை ஆராயுமாறு எதிர்க்கட்சித் தலைவரை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவித்தார். (ம-7,10)

## யாழில் ஊடகவியலாளர் வீடு மீதான தாக்குதலை வன்மையாக கண்டிக்கின்றோம்

### தமிழ் தேசிய மக்கள் முன்னணி

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபன் அவர்களின் வீட்டிற்கும் உடமைகளுக்கும் சேதமேற்படும் வகையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் க.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

இது கருத்துக்களைக் கருத்துக்களால் எதிர்கொள்ளத் தைரியமற்ற கோழைகளின் அற்பத்தனமான சட்டவிரோத செயற்பாடாகும்.

இத்தாக்குதலில் ஈடுபட்ட நபர்களைக் கைதுசெய்வதற்கு பொலிஸார் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கோருவதோடு, பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு எமது ஆதரவைத் தெரிவிக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார்.

மேலும்,

"யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளரின் வீட்டின் மீதான தாக்குதலின் பின்னணியில் அரச புலனாய்வுப் பிரிவு இருப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் அச்சுவேலியில் உள்ள ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் புகுந்து வன்முறையில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த தகவலறிந்து நேற்று முன்தினம் அங்கு சென்று பார்வையிட்ட செல்வராஜா கஜேந்திரன் அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த சம்பவத்தை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். தாக்குதலுக்கு பின்னர் துண்டுப்பிரசுரம் போடப்பட்டிருக்கின்றது.

எங்களைப் பொறுத்தவரையில் குறித்த தாக்குதலை நடத்தியவர்களின் பின்னணியை மூடி மறைப்பதற்காக குறித்த துண்டுப்பிரசுரங்கள் போடப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கிறோம் என்றார். (ம-7,10)

## சமஷ்டி தீர்வு தருவதானால் பகிரங்கமாக ஆதரவளிக்க தயார்

### சிறீதரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர், தமிழ் மக்களுக்கான சமஷ்டி தீர்வை பெற்று தருவதற்கு இரகசிய ஒப்பந்தம் ஒன்றை செய்ய தயார் என்றால் அவருக்கு நாம் பகிரங்கமாக ஆதரவளிக்க தயார் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பிரான்சில் தமிழர் வர்த்தக சங்கத்தினர் நடத்திய நிகழ்வொன்றில் புலம்பெயர் தமிழர்களை சந்தித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

"2005ஆம் ஆண்டு தேர்தலை நாம் புறக்கணித்த போது எங்களுக்கு பக்க பலமாக தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற சக்தி இருந்தது.

ஆனால், இன்று எங்களிடம் ஒரு சரியான பக்க பலம் இல்லை. இந்த சமயத்தில் நாங்கள் தமிழ்ப் பொது வேட்பாளரை களமிறக்கினால் தென்னிலங்கை அரிசியல்வாதிகள் எங்களிடம் இறங்கி வருவார்கள் எனத் தெரிவித்துள்ளார். (ம-7,10)

## தமிழ் பொது வேட்பாளர் தீர்மானம் எடுக்கவில்லை

### மாவை சேனாதிராசா

தமிழ் பொது வேட்பாளர் விடயம் குறித்து இலங்கை தமிழ் அரசுக்கட்சி இன்னும் தீர்மானம் எதுவும் மேற்கொள்ளவில்லை என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

தெற்கின் பிரதான கட்சிகளின் தேர்தல் அறிக்கையை பார்வையிட்ட பின்னரே அது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும்.

சிலர் தமது தனிப்பட்ட கருத்துக்களை வெளியிட்டாலும் அது எமது கட்சியின் முடிவல்ல என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் தமிழ் அரசு கட்சியின் நிலைப்பாடு குறித்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக் கால நடுப்பகுதி - பகுதி V

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

15

கன்சபாக்களின் தீர்ப்புக்களினின்று மாகாண முகவர்களுக்கு மனுச்செய்ய அதிகாரமும் வழங்கப்பட்டது. இப்புதுச் சட்டம் அமுல் செய்யப்பட்டதன் பேறாக நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை பெருமளவு குறைந்தன. நாளடைவில் கன்சாமுறை பிரித்தானிய நீதி பரிபாலன, உள்ளூர் நிர்வாக விடயங்களில் முக்கிய இடம் பெறலாயிற்று.

**ஆங்கிலேயர் ஆட்சியில் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி**

**கறுவா**

ஆங்கிலேயர் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றிய காலத்தில், நாட்டின் வருவாய்க்குக் கறுவாவே பிரதான காரணமாக இருந்தது. ஐரோப்பிய நாடுகளில் இலங்கைக் கறுவாவுக்கு நல்ல கிராக்கி இருந்தது. எனவே கறுவா வியாபாரத்தில் தனக்கிருந்த ஏகபோக உரிமையை பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி கண்ணுங் கருத்துமாகப் பாதுகாத்து வந்தது.

கம்பெனி நிர்வாகத்தில் இருந்து இலங்கை ஒரு குடியேற்ற நாடாக வந்ததும் கறுவாவை உற்பத்தியாக்கல், கறுவாப் பட்டையைச் சேர்த்தல் என்னும் தொழில்களை அரசாங்கமே ஏற்றுக்கொண்டது. இவ்விடயமாக ஆங்கிலேயர் அரசாங்கத்துக்கும் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிக்குமிடையில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி கம்பெனி கறுவாவை அரசாங்கத்திடமிருந்து பெற்று அதன் பொருட்டு பணத்தைக் கொடுத்தது.

1821ஆம் ஆண்டில் கம்பனியுடன் மேலே சொல்லியவாறு ஏற்பட்ட உடன்படிக்கை முடிவெய்த அடுத்த ஆண்டில் அரசாங்கமே கறுவா வியாபாரத்தில் ஏகபோக உரிமை கொண்டது. இந்த முறை 1838 ஆம் ஆண்டு வரை இருந்து வந்தது.

ஆனால் கறுவாவுக்கு உலகத்தில் இருந்த மதிப்பு மெல்ல மெல்ல குறைந்து வந்தது. இதற்குப் பலகாரணங்கள் இருந்தன. முதலாவது, இலங்கைக் கறுவாவின் விலை மிகக் கூடுதலாக இருந்தது. ஆகவே மலிந்த விலையில் வேறு இடங்களில் அதனைப் பெற்றனர். விசேடமாக டச்சுக்காரர் - கறுவாப் பயிரை ஜாவாவில் உற்பத்தியாக்கினர். இரண்டாவதாகக் கறுவாவுக்குப் பதிலாக இலவங்கம் (கிராம்பு) அமோகமாக விளைவிக்கப்பட்டது.

இதன் பயனாகவும் கறுவா வியாபாரத்தில் இலங்கைக்கு இருந்து வந்த ஏகபோக உரிமை படிப்படியாக மறையலாயிற்று.

16ஆம் 17ஆம் நூற்றாண்டுகளில் உலகம் எங்கும் கறுவா மிக்க மதிப்புடன் வாங்கப்பட்டு வந்தது. ஆனால் கால கதியில் ஏனைய பொருட்கள் கறுவா வகித்து வந்த ஸ்தானத்தைக் கைப்பற்றி விட்டன. வாசனைத் திரவிய வர்த்தகம் குறையக் கறுவா வர்த்தகமும் குறைந்து. இப்போது உலக வியாபாரத் துறையில் மிகவும் அற்பமான ஸ்தானத்தையே அது பெற்றிருக்கிறது.

இலங்கையின் ஈரலிப்பான பிரதேசங்களிலேயே கறுவா பயிரிடப்பட்டது. இங்குள்ள சீதோஷ்ண கிலே கறுவா விருத்திக்கு மிகவும் ஏற்றது. இலங்கையின் பிரதான ஏற்றுமதிச் சரக்காக கறுவா வகித்த ஸ்தானம் போய்விடவே மலைநாட்டில் விளைந்த இன்னோர் பண்டம் அந்த இடத்துக்கு வந்தது. அதுதான் கோப்பி.

**கோப்பி**

டச்சுக்காரரும் கோப்பிச் செய்கையில் ஈடுபட்டனர் என்பது உண்மையே ஆனால் 1837ஆம் ஆண்டு வரை அது முக்கியத்துவத்தை அடையவில்லை. அக்காலத்திலே மேற்கிந்தியத்தீவுகளில் இருந்துதான் கோப்பிக்கொட்டை உலக நாடுகளுக்குச் சென்றது. அக் கோப்பிக் கொட்டைக்கிருந்த ஏற்றுமதி வரி இலங்கை கோப்பிக் கொட்டைக்கிருந்த ஏற்றுமதி வரியிலும் பார்க்கக் குறைவாகவே இருந்தது. இதன் பயனாக முன்னைய கோப்பி இலங்கைக் கோப்பியிலும் பார்க்க மலிவாக விற்கப்பட்டது.

ஆனால் 1835ஆம் ஆண்டில் ஏற்றுமதி வரி விடயமாக இரு நாடுகளிலும் கூடியும் குறைந்துமிருந்த வித்தியாசம் நீக்கப்பட்டது. இன்னும், மேற்கிந்தியத் தீவுகளின் கோப்பித் தோட்டங்களில் வேலை செய்த அடிமைகளுக்குச் சுதந்திரம் நல்கி அவர்களை விடுதலையாக்கியதனால் அங்கே கோப்பி உற்பத்தி குறைந்தது. இதன் பயனாக இலங்கைக் கோப்பி வர்த்தகம் தலை தூக்கியது.

இத்துடன் மேற்கிந்தியத் தீவகளிற் கோப்பிச் செய்கையில் ஈடுபட்டிருந்த ரைலர் என்பவர் 1837ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்து கோப்பிச் செய்கையிற் சிறந்த புதிய முறைகளைக் காட்டிக் கொடுத்தார். அதன் பயனாகவும் கோப்பிச் செய்கை அபிவிருத்தியடைந்தது. மலை காட்டுக்குப் பல பாகங்களிலும் இருந்து செல்வதற்காக, நிர்மாணிக்கப்பட்ட தெருக்கள் வழியாக, விளைந்த கோப்பியைக் கொழும்புக்குக் கொண்டு வந்து புறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர்.

முடிக்குரிய காணிகளை அரசாங்கம் விற்றதால் கோப்பிச் செய்கை அபிவிருத்தியடைந்தது. இக்காணிகளில் உள்ள மரங்கள், பற்றைகளை அகற்றித் தோட்டங்களாக்கினர். 1835ஆம் ஆண்டில் 142,000 பவுண்கள் பெறுமதியான கோப்பி ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் 10 ஆண்டுகளின் பின் 250,000 பவுண்கள் பெறுமதியான கோப்பி ஏற்றுமதியானது.

1847ஆம் ஆண்டில் கோப்பிச் செய்கை விடயமாக ஓர் மந்த நிலை ஏற்பட்டது. எல்லோரும் சுலபத்தில் இலாபம் அடைய விரும்பிக் கண்டபடி தோட்டங்களை வாங்கிக் கோப்பிச் செய்கையில் ஈடுபட்டதாலேயே இவ்வீழ்ச்சி நேர்ந்தது.

ஆனால் 1855ஆம் ஆண்டில் கோப்பிச் செய்கை புத்துயிர் பெற்றுப் பழைய நிலைமையை எய்தியது. இதன் பயனாக 1855ஆம் ஆண்டில் 1,025,000 பவுண்கள் பெறுமதியான கோப்பியும் 1870ஆம் ஆண்டில் 2,753,005 பவுண்கள் பெறுமதியான கோப்பியும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

1870 இற்குப் பிந்திய ஆண்டுகள், விசேடமாக , 1872 முதல் 1877 வரை ஆள்பதியாகவிருந்த வில்லியம் கிறகரியின் காலம்தான். இலங்கைக் கோப்பியின் பொற்காலமாக அமைந்தது. கோப்பியே இலங்கைப் பொருளாதாரத்தின் அடிப்படையாகவும், நிர்வாகத்தின் வெற்றிச் சின்னமாகவும் அமைவு பெற்றது. அரசாங்கம் பெற்ற மிதமிஞ்சிய இறை வருமானங்களைக் கொண்டு, கிறகரி விசாலமான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டார். இவ்வாண்டுகளில் மாத்தளை, கண்டி, குருநாகல், நாவலப்பிட்டி, கினகத்தேனை, டிக்கோயா, கம்பளை, புசல்லாவை, அப்புத்தளை, வெளிமடை, சப்பிரகமுவா எனும் பிரதேசங்களிலெல்லாம் கோப்பித் தோட்டங்கள் பல்கிப் பெருகின.

கோப்பிச் செய்கையின் வளர்ச்சியுடன் அதனோடு தொடர்புள்ள வேறுபல நிறுவகங்களும் விருத்தியடைந்தன. வங்கிகள், ஏற்றுமதிக் கொம்பனிகள் என்பவை தோன்றின.

1839 இல் இலங்கை வர்த்தகர் சங்கமும் 1854 இல் இலங்கைத் தோட்டத் துரைமார் சங்கமும் நிறுவப்பட்டன. சட்ட சபையிலும் நாட்டின் அரசியல், பொருளாதார விவகாரங்களிலும் இவ்விரு சங்கங்களும் நிறைந்த செல்வாக்கும் அதிகாரமும் பெற்று விளங்கின.

ஆரம்பகாலத்தில் கோப்பிச் செய்கையில் சிங்களவர் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. ஏனெனில் அவர்களிடம் அம்முயற்சிக்குத் தேவையான முதலிருக்கவில்லை. ஆனால் 1850இற்குப் பின் பல தாழ் நிலச் சிங்களவர் கோப்பித் தோட்டங்களைத் திறந்து அவற்றை நன்முறையில் நிர்வகிக்கத் தொடங்கினர்.

அவர்கள் பெரும்பாலும் தொடக்கத்தில் ஆங்கிலத் தோட்டத் துரைகளுக்கு வண்டிகள், கட்டடங்கள் அமைக்கும் ஒப்பந்தக்காரராகவும், தச்சுத் தொழிலாளராகவும் மலைநாட்டுக்குச் சென்றவர்களாவர். அவர்கள் பல்லாண்டுகளாக முதலைச் சேகரித்து, நிலங்களை வாங்கிக் கோப்பியைப் பயிரிடத் தொடங்கினர்.

கண்டிப் பிரதேசத்தின் கிராமவாசிகளும், தம் வீட்டுச் சுற்றுப்புறங்களிலும் மிகச் சிறிய நிலப் பரப்புகளிலும் கோப்பியைப் பயிரிடலாயினர். 1870 இல் ஏற்றுமதியான கோப்பியில் 20% தொடக்கம் 25% வரை, சிங்கள முதளாளிகளினதும் கிராமவாசிகளினதும் நிலங்களில் உற்பத்தியானதெனக் கணக்கிடப்பட்டுள்ளது. 1870 இல் ஏற்றுமதியான கோப்பியின் அளவு 1,054,029 அந்தராகும்.

**கோப்பியின் வீழ்ச்சி**

கோப்பிச் செய்கை, 1870இல் அதி உச்ச நிலையை எய்தியது. அதன்பின்னர் அது எழுச்சியடைந்ததிலும் கூடிய வேகத்துடன் வீழ்ச்சியடையத் தொடங்கிற்று. இருபது ஆண்டுகளுள், கோப்பியின் உன்னத நிலையைப் பிற பயிர்கள் பெறலாயின.

கோப்பியின் வீழ்ச்சிக்கு, கோப்பி மரங்களில் தோன்றிய ஒரு பூச்சியே மூலகாரணமாயமைந்தது. 1868 தொடக்கம் அப்பூச்சியினால் பரவிய நோய், வெகுவிரைவில் தோட்டப் பிரதேசங்கள் எங்கும் பரந்தது. இந்த ஒரேயொரு பயிர், ஆயிரக்கணக்கான சதுரமைல் நிலப்பரப்பில் விளைவிக்கப்பட்டதனால் பூச்சியினால் ஏற்பட்ட அழிவு மிகப்பெரிதாயிற்று.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நாட்டு...

பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும் சான்றுப் பொருளையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7,10)

## ஜனாதிபதித்...

பாளராகக் களமிறங்கவுள்ளார் என்று அறிவித்துள்ளார்.

யாழ்.வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே தான் தமிழ்ப் பொது வேட்பாளராகக் களமிறங்கும் விடயத்தை அனந்தி தெரிவித்தார். (ம-7,10)

## சதொசவில்...

விலை 12 ரூபாயினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 448 ரூபாயாகும்.

01 கிலோ சிவப்புச் சீனி 05 ரூபாயினால், 01 கிலோ காய்ந்த மிளகாயின் விலை 05 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## ஊடகவியலாளர்...

யில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக குற்றவாளிகளை கைது செய்ய நான்கு பொலிஸ் குழு அமைக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் தடயவியல் பிரிவினர் சம்பவ இடத்திற்கு வருகைதந்து தடயங்களை சேகரித்ததோடு, பொலிஸ் விசேட கைரேகை நிபுணர்கள் பொருட்கள் மற்றும் வாகனங்களை எரிக்க பயன்படுத்திய பெட்ரோல் கொண்டு வரப்பட்ட கொள்கலனை கைரேகை பரிசோதனைக்கு உட்படுத்தியபோது இருவரின் கைரேகை அடையாளங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

வடமாகாண ஆளுநரின் பணிப்பின் பிரகாரம் வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரின் கீழ் இயங்குகின்ற நான்கு பொலிஸ் குழுக்கள் விசேடமாக அமைக்கப்பட்டு குற்றவாளிகளை கைது செய்யும்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## 13ஐ அமுல்...

யேனும் அந்த முயற்சியை முறியடிப்பேன் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தப்போவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வெளியிட்ட கருத்து தொடர்பாக, இவ்வாறு கருத்து தெரிவித்த மேர்வின் சில்வா, நாட்டைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இரத்தம் சிந்த தயார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"13வது திருத்தச் சட்டத்தை வழங்குவோம் என வடக்கில் சஜித் கூறுகின்றார்.

13ஆவது திருத்தத்திலுள்ள எதனை அவர் வழங்கப் போகின்றார்?

காணி அதிகாரங்களை அல்லது பொலிஸ் அதிகாரங்களை வழங்குகிறாரா, என்பதை அவர் தெளிவுபடுத்த வேண்டும்.

இந்த நாட்டில் வடக்கிற்கு தெற்கிற்கு என வெவ்வேறு அதிகாரங்கள் இருக்க முடியாது.

பொலிஸ் அதிகாரமும் காணி அதிகாரமும் மத்திய அரசாங்கத்தின் கைகளில் இருக்க வேண்டும்.

மாறாக மாகாணங்களுக்கு இந்த அதிகாரங்கள் பகிரப்படக்கூடாது.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நான் உயிரோடு இருக்கும் வரை அமுல்படுத்த விடமாட்டேன்.

அதையும் மீறி யாரேனும் 13ஆவது திருத்தச்சட்டத்திலுள்ள அதிகாரங்களை வழங்கினால், இரத்தம் சிந்தியேனும் வீதியில் இறங்கி அந்த முயற்சியை முறியடிப்பேன்.

சஜித்தின் தந்தையான ரணசிங்க பிரேமதாஸ அதிகளவான ஆயுதங்களை புலிகளுக்கு வழங்கியிருந்தார்.

இதனால் நூற்றுக்கணக்கான பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்டனர். அது குறித்து நான் இங்கு பேசப் போவதில்லை" என மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

## யாழை...

செயலகத்தின் கேட்போர்கூடத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

ஆசியாவில் ஸ்மார்ட் நகரங்களை உருவாக்கும் உலக சுகாதார ஸ்தாபனத்தினால், இலங்கையில் இது வரையில் 17 ஸ்மார்ட் நகரங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் நகரையும் ஸ்மார்ட் நகரமாக்கும் திட்ட யோசனை கடந்த 2019ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டுள்ளது.

எனினும் கோவிட் பெருந்தொற்று காரணமாக இந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஒருங்கிணைப்புடன் இந்த திட்டத்தை செயற்படுத்த உலக சுகாதார ஸ்தாபனம் தற்போது முன்வந்துள்ளதுடன், முன்கள ஆய்வுகளையும் நடத்தியுள்ளது.

அதற்கமைய, கழிவு முகாமைத்துவம், சுத்தமான குடிநீர், தூய்மை, ஆரோக்கியமான உணவு, ஆரோக்கிய வாழ்வை கட்டியெழுப்பக்கூடிய சூழல் கட்டமைப்பு அடங்கலாக ஒன்பது பிரிவுகளின் கீழ் ஸ்மார்ட் நகர திட்டத்தை நடைமுறைப்படுத்த உலக சுகாதார ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆளுநரின் அனுமதியை பெற்றுக் கொள்ளும் நோக்குடன் நேற்று கூட்டம் நடத்தப்பட்டது.

இந்தச் செயற்பாட்டிற்கான முழுமையான திட்ட முன்மொழிவைச் சமர்ப்பிக்குமாறு இதன்போது ஆளுநர் உலக சுகாதார ஸ்தாபன அதிகாரிகளுக்கு தெரிவித்தார்.

அத்துடன் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையான உதவிகளை பெற்றுக் கொடுக்குமாறு வடக்கு மாகாண சுகாதார மற்றும் உள்ளூராட்சி திணைக்களங்களின் அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார். (ம-7,10)

## இலங்...

பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன், இந்த விஜயத்தின் போது இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வருகை உறுதிப் படுத்தப்படுமென வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7,10)

# நீரில் மூழ்கி இரு பாடசாலை மாணவர்கள் பலி

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு வெல்ல வீதி பகுதியில் கடலில் நீராடச் சென்ற இரு பாடசாலை மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இந்த இரண்டு மாணவர்களும் மேலும் இரு மாணவர்களுடன் நேற்றுக் காலை அந்த இடத்திற்கு நீராடச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, நீரில் மூழ்கிய இரு மாணவர்கள் காப்பாற்றப்பட்டுள்ள நிலையில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7,10)








































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- இருபது அடிப்பாதை (20)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா இருபது இலட்சம் 20,00,000/=


(1217)

**Golden Real Estate (pvt) Ltd**
**077 029 4164,**
**077 329 4130, 077 294 1521**

## கமக்காரர்களுக்கு

சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட 4 ஸ்ரோக் (4 STROKE) பவர் ஸ்பிறேயர் (POWER SPRAYER) 20 லீற்றர் கொள்ளளவு இப்பொழுது எம்மிடம். மெல்லிய சத்தத்துடன் நிம்மதியாக நீங்கள் வேலை செய்ய, அத்துடன் இலங்கையில் முதன்முறையாக அறிமுகப்படுத்துகின்றோம்.

**"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"**



**ஆர்க் . என் . கம்பனி**

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாள்.
070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன்.
021 228 2020
**Hotline : 071 535 7799/ 071 973 9917**

(1215)

**வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 266/= | (Max)3Kg |
| 1 Kg Prima கோதுமை மா | - 170/= | |
| 5 Kg Prima கோதுமை மா | - 980/= | ~~1150/=~~ |
| 1 Kg றவை | - 285/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 285/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 410/= | |
| 1 Kg அரிசி மா | - 205/= | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~110/=~~ |
| 750ml நல்லெண்ணை | - 1455/= | ~~1550/=~~ |
| 01 Supiri மீன் ரின் | - 490/= | ~~650/=~~ |
| 1Kg சன்லைட் பவுடர் றோஸ் | - 350/= | ~~450/=~~ |
| 180ml Chik சம்போ | - 390/= | ~~480/=~~ |
| 400g சஸ்ரயன் | - 3600/= | ~~3900/=~~ |
| 400g வட்டவல தேயிலை | - 999/= | ~~1140/=~~ |
| 70g பேபி சோப் | - 115/= | ~~145/=~~ |

**400g Anchor**

1005/=



~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(1221)

**Happy Supermarket**
**0777 8080 30**

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**

- ✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-0599)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

## Show Money

**1%**

**லட்சத்திற்கு 1000 மட்டுமே சகல நாடுகளுக்குமான வங்கி இருப்பு/ விசா சேவை**

(1192)

**T.P : 075 033 6759**

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

**074 17 37 684**

(1176)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All counries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0599)

## மரண அறிவித்தல்

தோற்றம்
22 - 11 - 1934



மறைவு
12 - 06 - 2024

# நவரத்தினம் கனகம்மா

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கு மற்றும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் கனகம்மா அவர்கள் (12.06.2024) புதன்கிழமை அன்று இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இழையதம்பி - மீனாட்சி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு - கற்பகம் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முருகேசு நவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் அற்புதராசாவின் பாசமிகு தாயாரும் அற்புதராசா கலாநிதியின் அன்பு மாமியாரும் ரஜீவன் - துஸ்யந்தி, ரசிகரன் - சாம்பவி, ரஜிந்தன் - திவாஜினி, கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அதியன், ஆராதன், றியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்றவர்களான இராசையா, செல்லையா, நல்லம்மா, சிவபாக்கியம், அன்னப்பிள்ளை, சுப்பிரமணியம், சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.06.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வன்னியசிங்கம் வீதி,
இருபாலை றோட்,
கோண்டாவில் கிழக்கு.

தகவல் :
நவரத்தினம் அற்புதராசா
077 500 4897, 077 858 7178

(1212)

## காணிகள் விற்பனைக்குண்டு

- ✶ தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

1 ½ பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
பிரதான காபெட் டச்சு
வீதியில் இருந்து 300m தூரம்.

- ✶ தெல்லிப்பளை வடக்கு வீமன் காமம் பகுதியில் 2 ¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
பிரதான காபெட் டச்சு வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- ✶ இவ்விரண்டு காணிகளும் வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- ✶ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதிகள்.
- ✶ நன்னீர் ஊற்று சூழல்.
- ✶ ஒரு பரப்பின் விலை 12 இலட்சம். தரகர் தேவையில்லை.
- ✶ பார்வையிடும் நேரம்:- காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

(1216)

தொடர்புகளுக்கு:- ஜெயம்

**077 986 5457, 077 241 7589**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாப[illegible]னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.